விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 043 வள்ளுவர் ஆண்டு 2056 தை 18 வெள்ளிக்கிழமை (31.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# ஜனாதிபதி அநுர குமார இன்று யாழ். விஜயம்

- யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்கேற்பார்.
- வல்வெட்டித்துறை, சாவகச்சேரிப் பிரதேசங்களில் கலந்துரையாடலில் ஈடுபடுவார்.
- மறைந்த மாவைக்கு ஜனாதிபதி நேரில் அஞ்சலி செலுத்துவார்?

(15ஆம் பக்கம் பார்க்க)



## 200 மில்லியன் தேங்காய்கள் இறக்குமதி

(கொழும்பு)

200 மில்லியன் தேங்காய் களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படும் என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு தெரி வித்துள்ளது.

அமைச்சு விடுத் துள்ள அறிக்கையி 15

## சதொசவில் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

சில அத்தியாவசிய பொருட் களின் விலைகளைக் குறைப் பதற்கு சதொச நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய இறக் குமதி செய்யப்படும் 15

## மறைந்த மாவை சேனாதிராஜாவுக்கு அரசியல் தலைவர்கள் இரங்கல்

### மாவிட்டபுரத்தில் ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியை

(யாழ்ப்பாணம்)

மறைந்த இலங்கைத் தமி ழரசுக் கட்சியின் மூத்த தலை வர் மாவை சேனாதிராஜா வுக்கு அரசியல் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வரு கின்றனர்.

மாவை சேனாதிராஜாவின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக் காக யாழ்.மாவிட்டபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை மாவை சேனாதிராஜாவின் பூதவுட லுக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன் றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் 15

## உழவு இயந்திரத்துடன் மோ.சைக்கிள் மோதி விபத்து

### குடும்பஸ்தர் பலி; முல்லையில் சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, சுதந்திர புரம் பகுதியில் உழவு இயந் திரத்துடன் மோட்டார் சைக் கிளொன்று மோதி விபத்துக் குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள் ளது.

சுதந்திரபுரம் பகுதியில் நெல் ஏற்றிவந்த உழவு இயந் திரமும் மோட்டார் சைக்கிளொன்றும் 15

## இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினையை பேசித் தீர்க்கத் தயார்

### - அமைச்சர் சந்திரசேகர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை - இந்திய மீன வர் பிரச்சினையைப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்கத் தயார் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரி வித்துள்ளார். 15

## யாழில் இன்று நடைபெறவுள்ள போராட்டத்துக்கு தடை விதிக்குக

### பொலிஸாரின் மனு நீதிமன்றால் தள்ளுபடி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற வுள்ள கவனயீர்ப்புப் போராட் டத்திற்குத் தடை விதிக்கக் கோரிய பொலிஸாரின் மனுவை யாழ். நீதவான் நீதி மன்று தள்ளுபடி செய்துள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு இன்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வருகை தரவுள்ள நிலையில் வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிட்டி ருந்தனர்.

இந்நிலையில் நேற் 02

## வவுனியாவிலிருந்து அநுராதபுரத்துக்கு 27 பசு மாடுகள் கடத்தல் முறியடிப்பு; இருவர் கைது

(வவுனியா)

வவுனியாவிலிருந்து அநு ராதபுரத்துக்கு 27 பசு மாடுகள் கடத்தப்பட்ட சம்பவம் முறி யடிக்கப்பட்டதோடு இரு சந் தேக நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

வவுனியா, புளியங்குளம் பகுதியிலிருந்து அநுராதபுரம் பகுதிக்கு அனுமதிப்பத்திர மின்றி சட்டவிரோதமான முறையில் லொறியில் பசு மாடுகளை கொண்டு சென்ற சந்தேகநபர் 02

## அர்ச்சுனா பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாராளு மன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் அநுராதபுரம் நீதவான் நீதிமன்றில் முன் னிலைப் படுத்தப் பட்டதன் பின்னர் 15

## வடக்கின் தேவைகளுக்கு உதவி எதிர்பார்க்கின்றோம்

### ஐ.ஒ.எம் பிரதிநிதியிடம் ஆளுநர்



16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் விடிவிற்காக தன்னை அர்ப்பணித்தவர்

## மாவைக்கு கலாநிதி ஆறு.திருமுருகன் இரங்கல்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா அவர்களின் மறைவு தமிழ் மக்களுக்குப் பேரிழப்பாகும்.

இவ்வாறு அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உபதலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் விடுத்த அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்த அனுதாபச் செய்தியில்,

நீண்ட காலம் தமிழ் மக்களுக்காகத் தன் வாழ்நாளை செலவு செய்த மாவை சேனாதிராஜா அவர்கள் மிகவும் இளம் வயதில் தமிழ் மக்களின் விடிவிற்காக அரசியலில் இறங்கி, தன் வாழ்நாள் முழுவதும் அயராது உழைத்தவர்.

அவரின் பிரிவு குறித்து மிகவும் கவலை அடைகின்றேன். இன விடுதலைக்காக சிறைவாசம் அனுபவித்துப் பல இன்னல்களை சந்தித்தவர். இளைஞர்களை ஒன்று திரட்டி அன்று அகிம்சை வழியில் போராட்டங்களை நடாத்தியவர்.

என்றும் பண்புடனும் அரசியல் நாகரிகத்துடனும் நடந்து கொண்ட அனுபவசாலியை தமிழ் மக்கள் இழந்து விட்டார்கள்.

மூத்தோரை மதிக்கும் பண்புமிக்க மாவை சேனாதிராஜாவின் சிறப்புக்கள் தனித்துவமானவை.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற தெல்லிப்பழை துர்க்கை அம்மனையும், மாவை கந்தப் பெருமானையும் பிரார்த்தித்து இதய பூர்வமான அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (ம-7)

# போதையில் அட்டகாசம்

## வவுனியாவில் மதகுரு கைது

(வவுனியா)

மதுபோதையில் அட்டகாசம் செய்த மதகுரு ஒருவர் வவுனியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, புகையிரத வீதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் மது போதையில் அட்டகாசம் செய்த மதகுரு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

வவுனியா புகையிரத நிலைய வீதியில் மது போதையில் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் சென்ற மதகுரு ஒருவர் அப்பகுதியில் உள்ள உணவகம் ஒன்றின் கொத்து ரொட்டி போடும் கூட்டுக் கண்ணாடியை உடைத்து சேதப்படுத்தியதுடன், அருகில் இருந்த தொலைகாட்சி திருத்துமிடத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்த பழைய தொலைக்காட்சிப் பெட்டிகளையும் சேதப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் வீதியில் சென்றோர் குறித்த மதகுருவை மடக்கிப்பிடித்து வைத்திருந்ததுடன் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கியிருந்தனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் குறித்த மத குருவை கைது செய்ததுடன், பொலிஸ் காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொண்ட பின் நேற்று பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,250)

# அரச சேவையில் 30 ஆயிரம் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

அரச சேவையில் தற்போது உள்ள 30 ஆயிரம் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுர மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற அநுராதபுர மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் அரச சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்வது தொடர்பில் மேலும் கலந்துரையாடப்பட்டது.

அரச சேவையில் ஒருங்கிணைந்த மனிதவள முகாமைத்துவத்தின் அவசியத்தை வலியுறுத்தி, நேர்முகத்தேர்வு உள்ளிட்ட தொழில்நுட்ப நடைமுறைகளால் ஆட்சேர்ப்பில் தாமதம் ஏற்படுவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கலந்துரையாடலின் போது மேலும் உரையாற்றிய ஜனாதிபதி,

அரசாங்க சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவதன் ஊடாக மக்களுக்கு வினைத்திறன்மிக்க சேவையை வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என தெரிவித்தார். (ம-7)

# இலங்கைக்கு படையெடுக்கும் இந்திய சுற்றுலாவிகள்

வருடத்தின் இதுவரையான நாட்களில் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளுள் பெரும்பாலோனோர் இந்தியர்கள் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, ஜனவரி 1 முதல் 26 வரை நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 212,838 ஆகும்.

இவர்களுள் அதிகளவானவர்கள் இந்தியர்கள் என்பதோடு, அவர்களின் எண்ணிக்கை 37,383 ஆகும். (ம-7)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1954 - 10 - 15 | 2025 - 01 - 29 |

## டென்சில் சேவியர் மேரி றோஸ்

(முன்னாள் ஊழியர் - வடகடல் நிறுவனம் (சீனோர்), குருநகர்)

குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட டென்சில் சேவியர் மேரி றோஸ் (முன்னாள் ஊழியர் - வடகடல் நிறுவனம் (சீனோர்), குருநகர்) நேற்று முன்தினம் (29.01.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - திரேசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பற்றிக் - ராக்கினி தம்பதியரின் அன்பு மருமகளும் சேவியர்(கதிசன் ஹாட்வெயார் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் இர்ாஜேஸ்வரி, இராசறாணி, யோகம், அருட்தந்தை, யேசுரட்ணம்(பங்குத்தந்தை - நாவாந்துறை), இராஜசூரி, பெனற்(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மோட்டியர், காலஞ்சென்ற ஜெயசீலன் மற்றும் சின்ராசா, அழகு, யான்சி(சுவிஸ்), காலஞ்சென்ற ராசாத்தி மற்றும் சரஸ், ஜெறாட் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுவைனஸ்(அதிபர் - மண்டைதீவு றோ.க. வித்தியாலயம்), சுகந்தி(பிரான்ஸ்), சுரேக்கா, காலஞ்சென்ற சுபாஜனா ஆகியோரின் பாசமிகு தாயாரும் றெஜிமலா(கதிசன் ஹாட்வெயார்), ஜிம்றோன்(பிரான்ஸ்), சாள்ஸ் பிறின்ரன்(கதிசன் ஹாட்வெயார்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கவிஷாந், மேரி சுவைனியா, கதிசன், கனிஸ்ரன், சுஜிக்கா(பிரான்ஸ்), சாமுவேல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (01.02.2025) சனிக்கிழமை அவரது இல்லத்திலிருந்து பி.ப 2.00 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு பி.ப 2.30 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு அதன்பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல. 7, 1ம் குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம். 077 4006 399 (3278)

தகவல்:
குடும்பத்தினர்

### யாழில்...

நேற்று முன்தினம் புதன்கிழமை, பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், வடக்கு மாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் ச.சசிகரன், போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் பிரபாகரன், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவர் முருகையா கோமகன், தற்காலிக சுகாதார உத்தியோகஸ்தர்கள் சங்கத் தலைவர் எஸ்.ஜெஸ்மின் ஆகிய ஐவரின் பெயரைக் குறிப்பிட்டு, இன்று யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் போராட்டங்களை நடாத்த தடை விதிக்க வேண்டும் எனப் பொலிஸார் மன்றில் மனுத்தாக்கல் செய்தனர்.

குறித்த மனு மீதான விசாரணைக்காக பெயர் குறிப்பிட்ட ஐந்து நபர்களையும் மன்றில் முன்னிலையாகுமாறு மன்று அழைப்புக் கட்டளை நேற்று முன்தினம் விடுத்திருந்தது.

அந்நிலையில் குறித்த வழக்கு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளை, அழைப்புக் கட்டளை வழங்கப்பட்ட நபர்கள் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

அதில் வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவரின் சார்பில் மன்றில் முன்னிலையான சிரேஸ்ட சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், வேலையற்ற பட்டதாரிகள் தமது கோரிக்கையை முன்வைத்து, ஜனாதிபதியின் கவனத்தினை ஈர்க்கும் முகமாக அமைதியான வழியில் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

அமைதியான முறையில் பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் விடுக்காது, எமது கோரிக்கையை முன்வைத்து போராடவுள்ளனர். அதற்கு மன்று அனுமதி வழங்க வேண்டும் என விண்ணப்பம் செய்தார். சட்டத்தரணியின் விண்ணப்பத்தினை அடுத்து, உயர் பாதுகாப்பு வலயமாக கட்டமைக்கப்படும் பகுதிக்குள் செல்லாது, ஜனாதிபதி வரும் பாதையில், வீதிக்கு குறுக்காக செல்லாது, வீதியின் ஓரமாக கவனயீர்ப்பு போராட்டத்தை அமைதியான முறையில் முன்னெடுக்க மன்று அனுமதித்தது. (ம-7)

### 27 பசுமாடுகள்...

கள் இருவரை புளியங்குளம் பொலிஸார் நேற்று முன்தினம் புதன்கிழமை (29) இரவு கைது செய்துள்ளனர்.

புளியங்குளம் பொலிஸார் புளியங்குளம் சந்தியில் கடமையில் ஈடுபட்டிருந்த போது சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த லொறியொன்றினைச் சோதனையிட்ட போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 27க்கும் அதிகமான பசு மாடுகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் இருவரும் அநுராதபுரம் ரம்பாவ மற்றும் மிஹிந்தலைப் பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 49 மற்றும் 65 வயதுடையவர்கள் ஆவர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவடைந்த பயிர்களுக்கான இழப்பீடு வழங்கும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

**வெள்ளத்தால் அழிவடைந்த பயிர்களுக்கான இழப்பீடு வழங்கும் பணி நேற்று முதல் ஆரம்பமானது என விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.**

6,234 விவசாயிகளுக்கு 166.7 மில்லியன் ரூபாய் இழப்பீடு வழங்கப்படும் என்று விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, பொலநறுவை ஆகிய மாவட்டங்களில் 13,376 ஏக்கர் பயிர் நிலங்களுக்கு இந்த இழப்பீடு முதல் கட்டமாக வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)



## நீரிழிவு நடைப்பயணம்

(யாழ்ப்பாணம்)

"தடைகளை உடைத்தல், இடைவெளிகளை குறைத்தல்" எனும் தொனிப் பொருளில் நீரிழிவு நடைப் பயணம் இடம்பெறவுள்ளது. நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் JICA கட்டட முன்றலில் இருந்து ஆரம்பமாகும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-8)

# சுதந்திரதின விழாவில் பொதுமக்களும் பங்கேற்கலாம்

## பொது நிர்வாக அமைச்சர்



(கொழும்பு)


எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள நாட்டின் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வில் பொது மக்களும் பங்கேற்க முடியும் என பொது நிர்வாக அமைச்சர் ஏ.எச்.எம்.எச். அபயரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், சுதந்திர தின நிகழ்வுகளுக்காக 80 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் தமிழ் மொழியிலும் தேசிய கீதம் பாடப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

சுதந்திர தின நிகழ்வில் வாகன அணிவகுப்பு இல்லை. தேசியக் கொடியை ஏந்திச் செல்வதற்காக விமானப் படையின் 3 உலங்கு வானூர்திகள் மாத்திரம் பயன்படுத்தப்படும். மரியாதை அணி வகுப்புக்களில் பங்கேற்கும் படைவீரர்களின் எண்ணிக்கை 40 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா தெரிவித்துள்ளார்.

அத்துடன் முப்படைகள், பொலிஸ் உள்ளிட்ட பாதுகாப்பு படைகளின் 4,421 வீரர்கள் மரியாதை அணிவகுப்புக்களில் பங்கேற்பர் என இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ தெரிவித்துள்ளார். (நி-8)

# சீராகும் காற்றின் தரம்



(கொழும்பு)

நாட்டின் நகர்ப்புறங்களில் காற்றின் தரத்தின் மோசமான நிலை படிப்படியாகக் குறையும் என தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளின் வளிமண்டலத்தில் பனிமூட்டம் போன்ற அசாதாரண சூழ்நிலை நிலவுவதற்கு காற்றின் தரக் குறைவே காரணம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியா உட்பட பல தெற்காசிய நாடுகளில் இந்த நாட்களில் காற்றின் தரம் குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி நேற்று முன்தினம் இலங்கையில் காற்றின் தர சுட்டெண் 86இற்கும் 116 இற்கும் இடையில் இருந்தது. இதேவேளை, தற்போதைய காற்றின் தரம் காரணமாக சுவாசக் கோளாறு உள்ளவர்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி-8)

## தேயிலை ஏற்றுமதி மூலம் 1.43 பில்லியன் டொலர் வருமானம்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டில் தேயிலை ஏற்றுமதி மூலம் இலங்கை 1.43 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டியுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கை 2024 இல் 245.79 மில்லியன் கிலோ தேயிலையை ஏற்றுமதி செய்துள்ளது. இது 2023 இல் 241.91 மில்லியன் கிலோவாக இருந்தது.

2024 இல் ஏற்றுமதி செய்யப்பட்ட ஒரு கிலோ தேயிலைக்கு சராசரியாக 5.84 டொலர் கிடைக்கப் பெற்றுள்ளது. தேயிலை தொழில்துறை இலங்கைக்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் முக்கிய தொழிற்துறையாகும்.

இலங்கையின் தேயிலையை இறக்குமதி செய்யும் நாடுகளில் ஈராக் முதலிடத்திலும், ரஷ்யா மற்றும் ஐக்கிய அரபு இராஜ்ஜியம் அடுத்த இடங்களில் இருப்பதாகவும் அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-8)

# இலங்கையின் சுற்றுலாத்துறையில் இணைய விரும்பும் நியூசிலாந்து



(யாழ்ப்பாணம்)

நியூசிலாந்து சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நாடுகளில் ஒன்றாக விளங்கும் இலங்கையில், சுற்றுலாத் துறை மற்றும் கைத்தொழில், விவசாய உற்பத்தித் துறைகளில் இணைந்து செயற்படுவதற்கு நியூசிலாந்து ஆர்வமாக இருப்பதாக இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் டேவிற் பைன் குறிப்பிட்டுள்ளார்.

வடக்குக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள தலைமையிலான உயர்ஸ்தானிகராலய குழு நேற்று முன்தினம் புதன்கிழமை காலை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டு, துணை வேந்தர் பேராசிரியர் சி.சிறிசற் குணராஜா தலைமையிலான குழுவினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின் போது, இலங்கை, மாலைதீவு மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கான நியூசிலாந்தின் உயர்ஸ்தானிகர் டேவிற் பைன், சட்டவிரோத புலம்பெயர்வுக் கட்டுப்பாட்டுக்கான தொடர்பு அதிகாரி ப்ரெட் சீஃல்ட்ட் மற்றும் உயர்ஸ்தானிகராலயத்தின் கொள்கை ஆலோசகர் சுமுது ஜயசிங்ஹ ஆகியோரும் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் என். கெங்காதரன், பொருளியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் முத்துகிருஸ்ணா சர்வானந்தன் மற்றும் சுற்றுலா, விருந்தோம்பல் கற்கைத் துறையின் நிகழ்சித் திட்டத் தலைவர் பேராசிரியர் சிவானந்தமூர்த்தி சிவேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நியூசிலாந்துக்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும் இடையில் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், விவசாயம் மற்றும் கடற்றொழில், விளையாட்டு, மருத்துவம் ஆகிய துறைகளில் மேற் கொள்ளப்படக்கூடிய கூட்டுச் செயற்றிட்டங்கள் பற்றி இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நியூசிலாந்து அரசாங்கத்தின் அனுசரணையுடன் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான இணைப்பு நிலையம் ஒன்றை அமைப்பது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் சார்பில் முன்மொழிவொன்றைக் கோரிய இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர், இது தொடர்பில் இணைந்து பணியாற்றுவதற்கான தமது விருப்பத்தையும் வெளிப்படுத்தினார். (நி-8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெஸ்ட் அரங்கில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார் ஸ்மித்



அவுஸ்திரேலிய கிரிக்கெட் நட்சத்திரம் ஸ்டீவ் ஸ்மித் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் 10 ஆயிரம் ஓட்டங்களை எட்டிய 15 ஆவது வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

காலியில் இடம்பெற்றுவரும் இலங்கை அணியுடனான டெஸ்ட் போட்டியின் போது இந்த மைல் கல்லை எட்டினார்.

35 வயதான அவர் இந்த மாதத் தொடக்கத்தில் சிட்னியில் இந்தியாவுக்கு எதிரான தனது சொந்த டெஸ்டில் ஐந்து இலக்கங்கள் கொண்ட மைல்கல்லைத் தவற விட்டதால் 9,999 ஓட்டங்களுடன் இருந்தார்.

இந் நிலையில், நேற்று முந்தினம் ஆரம்பமான இலங்கையுடனான இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் டிராவிஸ் ஹெட் மற்றும் மார்னஸ் லாபுஷாக்னே ஆகியோர் ஆட்டமிழந்த பிறகு கிரீஸ்க்கு வந்தார் ஸ்மித்.

தான் எதிர்கொண்ட முதல் பந்தில் சிங்கிள் ஓட்டத்தை எடுத்து டெஸ்ட் அரங்கில் 10 ஆயிரம் ஓட்டங்களை எட்டினார்.

ஆலன் போர்டர், ஸ்டீவ் வா மற்றும் ரிக்கி பாண்டிங் ஆகியோருக்குப் பின்னர் இந்த சாதனையை எட்டிய நான்காவது அவுஸ்திரேலிய வீரர் ஸ்மித். இது அவரது 35 ஆவது சர்வதேச டெஸ்ட் சதமாகும். ஆவார். (6-8)

# ஐ.சி.சி தலைமை செயலதிகாரி ஜெப் அலர்டிஸ் ராஜினாமா



8 அணிகள் பங்கேற்கும் 9 ஆவது ஐ.சி.சி சம்பியன்ஸ் கோப்பை தொடர் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி முதல் மார்ச் 9 ஆம் திகதி வரை பாகிஸ்தான் மற்றும் துபாயில் இடம்பெறவுள்ளது.

பாதுகாப்பு காரணங்களுக்காக இந்திய அணி பாகிஸ்தானுக்கு செல்ல மறுத்ததால் இந்திய அணிக்குரிய ஆட்டங்கள் மட்டும் துபாய்க்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் சம்பியன்ஸ் கோப்பை தொடர் ஆரம்பமாக உள்ள நிலை யில் ஐ.சி.சி தலைமை செயல் அதிகாரி ஜெப் அலர்டிஸ் தனது பொறுப்பிலிருந்து ராஜினாமா செய்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தலைமை அதிகாரியாக செயற்பட்டது எனக்கு பெருமை அளிக்கிறது. என்னால் முடிந்த வரை இந்த பொறுப்பில் சிறப்பாக செயற்பட்டுள்ளேன். ஓய்வு பெறுவதற்கு இதுதான் சரியான நேரமாக இருக்கும் என்று கருதுகிறேன். என்று ஜெப் அலர்டிஸ் கூறினார்.

இவர் 2021 நவம்பர் மாதம் ஐ.சி.சி தலைமைச் செயலக அதிகாரியாக பதவியேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3296

லக்சா





மெரினா




சீமா




கம்சன்




டேவிட்




நிலக்சா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்
# Jaffna Science Association

**Call for Applications for Professor Alagaiah Thurairajah Memorial Gold Medal for Excellence in Engineering, Science and Technology**

The Jaffna Science Association is pleased to announce the Professor Alagaiah Thurairajah Memorial Gold Medal for Excellence in Engineering, Science and Technology to honor outstanding contributions within the Northern Province of Sri Lanka. This award celebrates individuals who have demonstrated exceptional service, professional excellence and dedication to regional development through research, student engagement and community outreach in the fields of Engineering, Science (Pure and Applied) and Technology (EST).

Eligibility Criteria


- The applicant must be a life member of the Jaffna Science Association.
- The applicant must be a current or former employee working within the Northern Province and have held a permanent residency visa for Sri Lanka for at least ten years prior to the award.
- Retired applicants must have actively served in Sri Lanka for a minimum of ten years before retiring.
- The applicant must have notable achievements in the field of EST within the Northern Province.
- The applicant must have demonstrated professional integrity, competence and ethical practice while remaining committed to public welfare and their profession.
- The applicant should have contributed significantly to meeting the needs of society and people in the Northern Province.
- The applicant must have made contributions to the economic and sustainable development of Sri Lanka.
- The applicant must employ innovative methods, ideas or smart techniques in their projects or work.
- The applicant's work should have made a significant impact and brought positive changes to the development of the Northern Province.

Application Deadline: **February 28, 2025**

How to Apply: Visit **https://sites.google.com/view/thejsa/events/call-for-nominations**

General Secretary (2024/2025)
Email: thejsaorg.office@gmail.com
Mobile: 077 072 5056
Website: https://sites.google.com/view/thejsa/
31.01.2025 (3275)


யாழ். மாவட்டத்தின் 512 ஆவது பிரிகேட் கட்டளைத் தளபதி கேணல் எல்.ஏ.ஆர். குணரட்ன, யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபனை நேற்று முன்தினம் புதன்



கிழமை மாவட்ட செயலரின் அலுவலகத்தில் சந்தித்து, பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார். (படம்:-சிவசாந்தன்)

## 26 நாட்களில் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள்

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து 26 ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் 2 இலட்சத்து 12 ஆயிரத்து 838 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 37,383 ஆகும்.

அதன்படி, ரஷ்யாவிலிருந்து 29, 266 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 18,036 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியிலிருந்து 12,663 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 12,496 சுற்றுலாப் பயணிகளும், பிரான்ஸிலிருந்து 10,361 சுற்றுலாப் பயணிகளும், அவுஸ்திரேலியாவிலிருந்து 8,181 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.(நி-8)


# தேவை

வவுனியாவில் அமைந்துள்ள மருந்தகத்திற்கு மருந்தாளர்கள்(Pharmacist) இரண்டு பேர் தேவை.

தொடர்புகளுக்கு (796)

**077 541 4882**

**லங்கா மஹறால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (559)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : **0091956615 6719**

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

# பதவி வெற்றிடம்

யாழில் உள்ள பிரபலமான கட்டிட நிறுவனம் ஒன்றிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

Technical officer (minimum 5years experience)
Management assistant
(3277)

send your CV to this gmail
lionengineering9@gmail.com
**076 200 4827, 077 558 8835**


# இராசிபலன்

31.01.2025
தை 18, வெள்ளிக்கிழமை
துதியை பிற்பகல் 4.38 மணிவரை

அவிட்டம் முற்பகல் 8.14 மணிவரை
சுபநேரம் 6.36-8.06 மணிவரை
இராகுகாலம் 11.06-12.36 மணிவரை

சந்திராஷ்டமம்
ஆயிலியம்.

வளவன்

**மேஷம்**
பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**ரிஷபம்**
சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சொன்ன சொல்லைக் காப்பாற்றிமகிழ்வீர்கள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்**
ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விட்டுப் போன தொடர்புகள் மீண்டும் வந்து சேரலாம், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்**
ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தேவையற்ற கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்**
எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வருமானம் திருப்தி தரும், வழிபாட்டால் ஆர்வம் கூடும், உறவினர் நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**கன்னி**
மறைமுகப் போட்டிகள் மாறும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சுவாரஸ்யமான நாள்.

**துலாம்**
நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வளர்ச்சி கூடும் நாள்.

**விருச்சிகம்**
சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**தனுசு**
நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வியாபார விரோதம் விலகும், பண வரவு திருப்தி தரும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.

**மகரம்**
அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**கும்பம்**
விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**மீனம்**
சுபகாரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உடனிருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது, வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**பணம் சேமிப்பதென்பது ஊசியால் குழி தோண்டுவது போன்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேய்ச்சல் தரவையினை ஏற்படுத்தி தாருங்கள்

(கண்டாவளை)

மன்னார் பெரியபண்டிவிரிச்சான் பிரதேசத்தில் உள்ள பண்ணையாளர்கள் தமது கால்நடை வளர்ப்பில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் .

மன்னார் மடு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பெரியபண்டிவிரிச்சான் கிராம மக்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பு ஆகிய தொழில்களை அடிப்படையாகக் கொண்டு தங்களின் வாழ்வாதாரங்களைப் பூர்த்திசெய்து வருகின்றனர்.

கால்நடைகளை கொண்டு மேய்ப்பதற்கு மேய்ச்சல் காணிகள் இன்றி. குளங்களிலும் காடுகளிலும், கால்நடைகளை மேய்ப்பதால் முதலைகளும் புலிகளும், கால்நடைகளை வேட்டையாடுகின்றன.

இதனால் தங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகக் கால்நடை வளர்ப்போர் கவலை தெரிவித்தனர்.

தங்களுக்குக் கால்நடைகளைப் பாதுகாப்பாக மேய்ப்பதற்கு உரிய மேய்ச்சல் தரவைக் காணிகளை ஒதுக்கி தங்களுக்கான ஒரு தீர்வினை உரிய அதிகாரிகள் பெற்றுத் தருமாறும் பெரிய பண்டிவிரிச்சான் கால்நடை பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-8-315)

# புதுமைமாதா திருவிழா

(யாழ்ப்பாணம்)

குருநகர் புதுமைமாதா ஆலய வருடாந்தத் திருவிழா திருப்பலி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும். முதல் திருப்பலி காலை 5 மணிக்கும், திருவிழாத் திருப்பலி 6.30 மணிக்கும்,11 மணிக்கு 3 ஆவது திருப்பலியும் இடம்பெறவுள்ளது என குருநகர் புதுமை மாதா ஆலயப் பங்குத் தந்தை அருட்பணி யாவிஸ் அறிவித்துள்ளார். (ரி-8)




# மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு அஞ்சலி

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவின் பூதவுடல் யாழ். மாவிட்டபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இதன்போது அரசியல் தலைவர்கள், பொது அமைப்புக்களை சேர்ந்தவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.**

# மக்களின் உரிமைக்காக முன்நின்ற குரல்



## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

மறைந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவிற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரமேதாச தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிட்ட இரங்கல் பதிவிலே இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகத் தொடர்ந்து முன்நின்று பாராளு மன்றத்திலும் அதற்கு வெளியிலும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் எழுப்பிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவருமான மாவை சேனாதிராஜாவின் மறைவிற்குத் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரமேதாச தெரிவித்துள்ளார். (6-8)

# மாவையின் மறைவு தமிழர்களுக்கு பேரிழப்பு

## அமைச்சர் சந்திரசேகர்



(யாழ்ப்பாணம்)

"அறவழி போராட்டம், சிறைவாசம் என தனது ஐந்து தசாப்தகால அரசியல் பயணத்தில் தமிழ் மக்களுக்காகக் குரல் எழுப்பிவந்த மாவை சேனாதிராஜாவின் மறைவு தமிழ் மக்களுக்குப் பேரிழப்பாகும்" என கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மறைவு தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள இரங்கல் செய்தியிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் யாழ்.மாவ ட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவின் மறைவுச் செய்தி பெரும் மனவேதனையைத் தருகின்றது.

5 தசாப்தகாலமாக அரசியல் பயணத்தின் போது மக்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்ட அரசியல்வாதியாவார். மாவை அண்ணன் மறைந்தாலும் மக்களுக்காக அவர் எதிர்பார்த்தவற்றை நிச்சயம் நாம் செய்வோம் எனத் தெரிவித்தார். (6-8)

# தமிழரசுக் கட்சியை உயிர்ப்புடன் வைத்திருந்தவர்

## இரங்கல் செய்தியில் சித்தார்த்தன்




(யாழ்ப்பாணம்)

தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் முதன்மைப் போராளிகளில் ஒருவருமான மாவை சேனாதிராஜாவின் மறைவுக்கு புளொட் கட்சியின் தலைவர் த.சித்தார்த்தன் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிட்ட இரங்கல் செய்தியிலே இவ்வாறு தெரிவித்தார்.சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் தீவிரம் பெற்ற எம் இனத்திற்கு எதிரான திட்டமிடப்பட்ட இன ஒடுக்கல் நடவடிக்கைகள் காரணமாக அன்றைய தமிழ் இளைஞர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்த போது மிகத் தீவிரமாக செயற்பட்டவர்களில் மாவை அண்ணரும் ஒருவராவார்.

தமிழரசுக் கட்சியை உயிர்ப்புடன் வைத்திருந்தவர்களில் முக்கியமானவர் மாவை அண்ணன் அவர்கள். வசதி குறைந்த குடும்பத்திலிருந்து வந்த சாதரண இளைஞர் ஒருவர், ஒரு இனத்தின் தலைவன் எனும் இடத்தை அடையும் வரையிலான அவரது விடுதலை நோக்கிய பயணம், தமிழ் மக்களின் விடுதலையை நேசிக்கின்ற அவர்களுடைய விடுதலைப் போராட்டத்துக்கு தலைமை கொடுக்க தயாராகின்ற அனைத்து இளைஞர்களுக்குமான அரசியல் பாடமாக அமையும் என அவர் தெரிவித்தார். (6-8)

# தமிழ்த் தேசியத்திற்காக தன்னை முழுவதும் அர்ப்பணித்தவர்



## இளங்குமரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மறைவு இலங்கை அரசியலுக்கும் தமிழ் பேசும் சமூகத்துக்கும் பேரிழப்பாகும் என யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இளங் குமரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மறைவு தொடர்பில் நேற்று விடுத்துள்ள இரங்கல் செய்தியிலே இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியம் தடம்புரளக் கூடாது என்பதற்காக அர்ப்பணிப்புடனும் விட்டுக்கொடுப்புடனும் செயற்பட்டவர் மாவை சேனாதிராஜா ஐயா. மக்களுக்காக களமாடி சிறைச்சாலைகூட சென்றுள்ளார். இப்படியான ஒரு தலைவரின் இழப்பு நிச்சயம், இலங்கை அரசியலுக்கு பெரும் இழப்பாகும். குறிப்பாக தமிழ் பேசும் சமூகத்துக்கு பேரிழப்பாகும் என குறித்த இரங்கலில் பாராளு மன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்துள்ளார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவில்

# நேருக்கு நேர் மோதிய பயணிகள் விமானம்

## சடலங்களாக மீட்கப்படும் பயணிகள்

(வோஷிங்டன்)

**65 பேருடன் சென்ற அமெரிக்கப் பயணிகள் விமானம், ரீகன் தேசிய விமான நிலையத்திற்கு அருகே நடுவானில் இராணுவ உலங்கு வானூர்தியுடன் மோதி போடோமாக் நதியில் விழுந்து விபத்துக்குள்ளாகியது.**

இந்த நிலையில் மீட்புக் குழுக்கள் இதுவரை நதியில் இருந்து சுமார் 18 பேரின் சடலங்களை மீட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தீயணைப்பு படகுகளும் சுழியோடிகளும் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். அமெரிக்காவில் வானில் பறந்து கொண்டிருந்த அமெரிக்கன் ஏர்லைன்ஸ் நிறுவன விமானம் ஒன்று அமெரிக்க இராணுவ பிளாக்ஹாக் உலங்கு வானுர்தியுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்று நிகழ்ந்ததாக விமானப் போக்குவரத்து நிர்வாகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விமான விபத்தையடுத்து ரொனால்ட் ரீகன் தேசிய விமான நிலையத்தில் அனைத்து விமான சேவைகளும் நிறுத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரித்துள்ளனர். விபத்துக்குள்ளான விமானம்- PSA ஏர்லைன்ஸ் பொம்பார்டியர் CRJ700 - ஜெட் விமானத்தில் 65 பயணிகள்பயணித்ததாகக் கூறப்படுகிறது.

இந்த விமானம் அமெரிக்கன் ஏர்லைன்ஸ் வணிகப் பயணத்திற்காகப் பயன்படுத்தப்பட்டு கன்சாஸிலிருந்து வோஷிங்டனுக்குச் சென்று கொண்டிருந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி-8)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1973 -இந்து
நட்சத்திரம்:உத்தரம்
2 இல் செவ்
கி.பா:43 1/2
உயரம்:5'8"
தகைமை/தொழில்:Business management,London
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15103

பிறப்பு:1984 -இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா:39 1/2
உயரம்:6
தகைமை/தொழில்:A/L,MA
எதிர்பார்ப்பு:விவாகரத்தானவர், அரச உத்தியோகம்
தொ.இ: B/15104

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்:பரணி
8இல் செவ்
கி.பா:56
உயரம்:5'10"
தகைமை/தொழில்: Engineer, Mechanical Engineer(Canada)
எதிர்பார்ப்பு: Degree holder
தொ.இ: B/15108

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1996- இந்து
நட்சத்திரம்-அவிட்டம்
5 இல் சூரி செவ்
கி.பா-7
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc,Software Engineer
எதிர்பார்ப்பு:Engineer
தொ.இ: G/15105

பிறப்பு-1995- இந்து
நட்சத்திரம்:திருவோணம்
கி.பா:63 7 இல் செவ்
உயரம்:5'4"
தகைமை/தொழில்:Bsc Laboratry
எதிர்பார்ப்பு:Doctor, Engineer
தொ.இ: G/15106

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்: ரோகினி 12 இல் செவ்
கி.பா:- 31 1/4
உயரம்:5'4"
தகைமை/தொழில் : BBA, Accountant(PVT)
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15107

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை : பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர்: நடேசப்பெருமான் உதயச்செல்வன்
சபை ஆதனவரிப் பதிவேட்டின்படி பெயர்: தாவீது அந்தோனிப்பிள்ளையின் வாரிசுகள்
முகவரி: ஆதன இல: 147/7, தெல்லிப்பளை வீதி, பண்டத்தரிப்பு, வட்டாரம் -03

வட்டாரம் 03, தெல்லிப்பளை வீதி, ஆதன இல: 147/7 இல் அமைந்துள்ள ஆதனம் உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்கு பண்டத்தரிப்பு கோவிற்பற்று பண்டத்தரிப்பு இறை "மானாவளை" நிலப்பரப்பு இரண்டேகால் விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் நீக்கிலான் மரியானும் பெண் உயித்தியும் ஆகியோரால் பிரசித்த நொத்தாரிசு சயம்பர் கந்தையாபிள்ளை முகதாவில் 5474/1937.10.17 ஆம் இலக்க சீதன உறுதிப்பிரகாரம் தாவீது அந்தோனி பெண் ஆரோக்கியத்துக்கு வந்தடைந்து,

பின்னர் பிரசித்த நொத்தாரிசு தியாகலிங்கம் கணதீபன் முகதாவில் 2238/2022.09.03 ஆம் இலக்க பிரகடன உறுதிப்பிரகாரம் ஏணஸ்ற் கைம்பெண் பற்றீசியாவுக்கு வந்தடைந்தது.

பின்னர் பிரசித்த நொத்தாரிசு தியாகலிங்கம் கணதீபன் முகதாவில் 2535/2023.10.04 ஆம் இலக்க அறுதி உறுதிப்படி நடேசப்பெருமான் உதயச்செல்வனுக்கு சொந்தமாக்கியுள்ளார்.

ஆதன விபரம்

நில அளவையாளர் T.தங்கராஜா அவர்களால் வரையப்பட்ட 6334ஆம் இலக்க 2013.02.29 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 02 குளி 10.65 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு

வடக்கு - யேசுதாஸ் இருதயசீலன் மற்றும் பெண் வசந்தியின் ஆதனம்
கிழக்கு - தம்பிப்பிள்ளை பயஸினாதனம்
மேற்கு -ஒழுங்கை
தெற்கு - சாமிநாதர் கைம்பெண் விறிசித்தம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை நடேசப்பெருமான் உதயச்செல்வன் என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் தெரிவிக்காத பட்சத்தில் விண்ணப்பதாரரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(3273)

**செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்- 21 மத்தியூஸ் வீதி, ஆதன இல 63, என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் பிலிப்பு நல்லையா இராஜேந்திரம் அமிர்தவாசகமும் பெண் மேரி ரோசம்மாவும் என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை வஸ்தியாம்பிள்ளை மரியாம்பிள்ளையும் பெண் எலிசம்மாவும் 13.11.1970 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜே.ம. சைமன் முகதாவில் 595ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் (நெற். பர.2 குளி 6, 1/6) கிழக்கு புறமாக நிலப்பரப்பு 1 குளி 3, 1/12 நிலப்பரப்பினை பிலிப்பு நல்லையா இராஜேந்திரம் அமிர்தவாசகமும் பெண் மேரி ரோசம்மாவுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை அமிர்தவாசகம் ஜோர்ஜ் ரவீந்திரன் 30.10.2022 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு லி.துரைராஜா முகதாவில் 3435ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் (நெற் பர2 குளி 6, 1/6) கிழக்கு புறமாக நிலப்பரப்பு 1 குளி 3, 1/12 நிலப்பரப்பினை பொன்னையா அன்ரன் அனாசிஸ் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று கரையூர் இறை "குளத்து வளவு" நிலப்பரப்பு இரண்டு குளி ஆறுடன் ஒன்றின் கீழ் ஆறு (நெற். பர.2 குளி 6, 1/6) கிழக்கு புறமாக நிலப்பரப்பு 1 குளி 3, 1/12 உம் வீடும் குசினியும் கிணறும் கக்கூசும் செய்பயிர் வான்பயிர்களும் மற்றும் அதற்குச்சேர்ந்தவைகளும் இதற்கு எல்லைகள்:-

கிழக்கு: சேவியர் கைம்பெண் லூர்த்தம்மாவின் ஆதனம்.
வடக்கு: வேலுப்பிள்ளை ஞானப்பிரகாசத்துக்கும் பெண் மரியப்பிள்ளைக்கும் உரிய ஆதனம்.
மேற்கு: சேதுப்பிள்ளை துரைராசா பெண் பிறிஜிற்றின் ஆதனம்.
தெற்கு: றோட்டு
இதடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை பொன்னையா அன்ரன் அனாசிஸ் என்பவர் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது பொன்னையா அன்ரன் அனாசிஸ் என்பவர் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

(சி-2165)

ஆணையாளர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## ஆசிச்செய்தி

இலங்கையில் பாரம்பரியமாகப் பேணப்பட்டு வரும் சிவ வழிபாட்டில், கந்த புராணத்தில் மஹா சாஸ்தான் என விவரிக்கப்படும் ஐயனார் பெருமான் சுன்னாகம் தாழையடிப் பகுதியில் புராதனமாக வயல் சூழ்ந்த மருத மர நிழலில் இருந்து அருள் பாலித்து வருகிறார். இலங்கையிலிலும் வெளி நாடுகளிலும் வசித்து வரும் ஐயப்பன் பக்த அடியார் களாலும் பூசகர்கள், நிர்வாகத்தினர், ஆலயத் திருப்பணி சபையினர் ஆகியோரின் அரும் பணி யால் பல திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகம் நடை பெறுவதையிட்டு மிக மகிழ்ச்சி அடைகின்றோம். கும்பாபிஷேக குருமார்கள், பரம்பரைப் பூசகர்கள், நிர்வாகத்தினர், திருப்பணி சபையினர் அனைவருக்கும் நல்லாசி கூறி கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்று அனைவரும் சுபீட்சமடைய வாழ்த்து கின்றோம்.

**கிரியாக கலாபமணி,**
**கலாநிதி சிவஸ்ரீ. நா. சோமாஸ்கந்த குருக்கள்,**
**கதிரமலைச் சிவன் தேவஸ்தானம், ரொரன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயம், கனடா (ஆகம ஆலோசகர்).**



## ஆசிச்செய்தி

சுன்னாகம் தாளையம்பதியிலே வீற்றியிருந்து பூரணை புஷ்கலை சமேதராக அருளாட்சி செய்யும் ஸ்ரீ அரிகரபுத்திர ஐயனார் தேவஸ்தானம் புன ராவர்த்தன ஸப்தாதச குண்டபக்ஷ மஹா கும்பாபி ஷேகம் காணவிருப்பது நம் தவப்பேறன்றி வேறில்லை. வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அள்ளித்தரும் தாளையம்பதியான் ஆயைம் கொண்டு அமைந் திருப்பதும் மருத நிலத்து எழில்க் கோலமே. பன்னெடுங்கால அற்புதமான வரலாறு கொண்ட இக் கோயிலின் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வெய்துகின்றேன். மலர்க் குழுமத்தின் முயற்சியையும் பாராட்டி மகிழ்கின்றேன்.

" என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்மந்த பரமாசார்ய சுவாமிகள்,**
**நல்லை ஆதீன குருமுதல்வர்.**



## வடமகாண ஆளுநரின் வாழ்த்துச்செய்தி

சுன்னாகம் தாளையடி பூரணை புஷ்கலை சமேத ஸ்ரீ அரிகரபுத்திர ஐயனார் தேவஸ்தானத்திலே நிகழும் குரோதி வருடம் தை மாதம் 18 ஆம் நாள் (31.01.2025) இடம்பெறும் மஹா கும்பாபிஷேகத்தையொட்டி இறையருளுடன் கூடிய வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மிகவும் மனமகிழ்ச்சி அடைகின்றேன். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்போர் ஆன்றோர். எம்மையெல்லாம் தனது அதீத சக்தியினால் ஆட்கொண்டு அருள்பாலிக்கும் இறைவனுக்கு ஆலயம் அமைத்து வழிபடுதல் வழக்கமாக இருந்தபோதிலும் அவ் ஆலயங்களில் விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்வதோடு மட்டுமல்லாது ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடந்த பின்னர் தான் அது வழிபாட்டுக்குரிய தலமாக முழுமை பெறுகின்றது. ஆலயங்களில் வீற்றிருக்கும் விக்கிரகங்களுக்கு அபிஷேகங்கள் மூலம் இறைசக்தியை நிறைத்தலே கும்பாபிஷேகம் ஆகும். இதன்போது அந்தண சிவாச்சாரியார்களின் சக்தி வாய்ந்த மந்திரங்கள் மூலம் யாகங்கள் செய்யப்பட்ட புனித தீர்த்தங்களால் இறைவன் மீதும் கோபுரக் கலசங்கள் மீதும் அபிஷேகம் செய்யப்படுகின்றது. இவ்வாறு செய்யப்படுகின்ற கும்பாபிஷேகம் மூலமாகவே அவ் ஆலயத்திலுள்ள விக்கிரகங்கள் தெய்வ சக்தியைப் பெற்று மக்களுக்கு அருள்பாலிக்கின்றன

இந்த வலையில் சுன்னாகம்- தாளையடி பூரணை புஷ்கலை சமேத ஸ்ரீ அரிகர புத்திர ஐயனார் தேவஸ்தானத்தில் இன்றைய தினம் மகா கும்பாபிஷேகம் நிகழ திருவருள் கூடியுள்ளமையானது அப்பகுதி மக்கள் செய்த தவப்பேறாகும் என்பதுடன் இந் நன்நாளில் அனைத்து மக்களும் எம்பெருமான் அருள்பெற்று சீரும் சிறப்புடன் வாழவும் ஐயனாரின் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவும் வேண்டி எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நா.வேதநாயகன், ஆளுநர், வடக்கு மாகாணம்.**



## அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்னும் ஆன்றோர் வாக்கு ஆலயங்களின் முக்கியத்துவத்தையும் சிறப்பினையும் எமக்கு எடுத்தியம்பி நிற்கின்றன. சைவத்தையும் தமிழையும் தம் இரு கண்களாக எண்ணுகின்ற யாழ்ப்பாண மக்களுக்கு பூரணை புஷ்கலை சமேதரராய் அருளாட்சி புரிகின்ற ஸ்ரீ அரிகரபுத்திர ஐயனார் பெருமானுக்கு நடைபெறுகின்ற மஹா கும்பாபிஷேகத்தைக் கண்டு களிக்கும் பாக்கியம் கிடைக்கப் பெற்றமை பெரும் பேறாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல்வேறு சிறப்புக்களையும் வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள இவ் ஆலயம் மீள் பொலிவு பெற்று பல நல்லுள்ளங்களினது நிதி, பொருள், சரீர உதவியுடனும் குருமார்களது நல்லாசியுடனும் மஹா கும்பாபிஷேகம் நடைபெற இறையருள் கைகூடியமை எமக்கெல்லாம் கிடைத்த வரப்பிரசாதமாகும். இது போன்ற மகாகும்பாபிஷேக நிகழ்வுகள் இன்றைய இளம் சமூகத்தினருக்கு மட்டுமல்லாது எதிர்கால சந்ததியினருக்கும் ஆன்மீகம் தொடர்பான ஈடுபாட்டினையும் ஆலய வழிபாட்டின் மகத்துவத்தினையும் எடுத்தியம்பி நல்லதோர் சமுதாயம் எம் பிரதேசத்தில் உருவாகிட வழிகோலும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.


இத்தகைய நல்ல ஆன்மீக வளர்ச்சியுடன் கூடிய இறைபணியில் அர்ப்பணிப்பான சேவையை வழங்கி வருகின்ற அனைவரும் எனது பாராட்டுக்குரியவர்கள். இவ் ஆலயத்தை இத்தகைய புதுப்பொலிவுடன் புனரமைப்பதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அடியவர்கள், குருமார்கள், ஆலய பரிபாலனசபையினர், திருப்பணிச்சபையினர், ஏற்பாட்டுக் குழுவினர் அனைவருக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு மலரும் கும்பாபிஷேக மலர் சிறப்புடன் வெளிவர என் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**மருதலிங்கம் பிரதீபன்,**
**அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**



# சுன்னாகம்-தாளையடி பூரணை புஷ்கலை சமேத ஸ்ரீ அரிகரபுத்தி


# மஹா கும்பாபிஷேக வி



## வாழ்த்துச்செய்தி

இலங்கை மணித்திருநாட்டின் சைவமும் தமிழும் தழைத்தோங்க விநாயகர், சிவன், சுப்பிரமணியர் ஆகிய ஆலயங்கள் பல பாகங்களிலும் சமய வழிபாட்டுத் தலங்களாக இருந்து வருகிறது. அத்துடன் வயல் சார்ந்த, கடல் சார்ந்த இடங்களில் எல்லாம் வழிபாட்டிற்குரிய குல தெய்வமாகப் பூரணை புஷ்கலை சமேத அரிகர புத்திர ஐயனார் பெருமான் பலபேரது குல தெய்வமாக வீற்றிருந்து அருள் பாலித்து வருகிறார். யாழ்ப்பாணம், சுன்னாகம் பதியில் பல நூறு வருடங்களாகத் "தாழையடி ஐயனார்" எனும் பெயருடன் பலபேரின் நம்பிக்கைக்குரிய தெய்வமாக ஐயனார் ஆலயம் புகழுடன் திகழ்ந்து வருகின்றது. பரம்பரையாகப் பூசாரியர்கள் பராமரிப்பில் இருந்து வருகிற இவ் ஆலயம் பரிபாலன சபையினர்கள், திருப்பணி சபையினர்கள் அனுசரணையுடன் பல திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு அழகுற வர்ணம் தீட்டி 31.01.2025 வெள்ளிக்கிழமை 17 குண்ட மகா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள்பாலித்துள்ளது. இப் புனித வைபவத்தைப் பங்காற்றி வரும் குருமார்கள், பூசகர்கள், நிர்வாகஸ்தர்கள், திருப்பணி சபையினர்கள், நிதி உதவி வழங்கிய மெய்யடியார்கள் அனைவருக்கும் ஐயனார் பெருமான் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து நன்றி கூறி மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்று மக்கள் அனைவரும்தாழையடியான் திருவருள் பெற்றுய்ய பிரார்த்திக்கிறோம்.

**முத்தமிழ் குருமணி, க்ரியாக்கிரமஜோதி வாகீசவாரிதி,**
**சகலாகமசங்கிரகர், சிவகாம கலாநிதி**
**சிவஸ்ரீ.நா.சர்வேஸ்வரக் குருக்கள்,**
**ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்.**



## செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

ஐயனார் ஆலயம் அற்புதம் நிறைந்தது. பல ஊர் மக்களின் பிரதான காவல் தெய்வம். ஒவ்வொரு சனிக்கிழமையும் அடியார்களுக்கு தாராளமாக அன்னதானம் வழங்கும் திருத்தலமாகும். இவ் ஆலயத்தை பரம்பரை பரம்பரையாக அறங்காவலர் குடும்பம் சிறப்பாக நடாத்தி வருகிறார் கள். நித்திய பூசையையும் அவர்களே தொடர்ந்து செய்து வருகிறார்கள். ஆலயத்தின் நைமித்திய குருவாக சர்வதேசமும் அறிந்த கிரியா வித்தகர் சிவஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்களும் அவர்களின் மைந்தனும் மிகச்சிறப்பாக வழிநடத்தி வருகிறார்கள். ஐயனார் ஆலயத்தைப் புதுப்பொலிவுடன் மிளிரச்செய்ய வேண்டும் என ஆலய அறங்காவலர்களும் இளைஞர்களும் ஆசைப்பட்டனர். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஐயனார் அடியார்களும் கோடிக்கணக்காக நிதி உதவி செய்து கோயிலை முற்று முழுதாகப் புதுப்பித்துக் கட்ட உதவியுள்ளனர். இவ்வாலயத்தில் கூட்டுப்பிரார்த்தனை, சமயச்சொற்பொழிவு, அன்னதானம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இவ்வாலயத்தில் 1991 ஆம் ஆண்டு முதல் பல தடவைகள் சொற்பொலிவு ஆற்றும் வாய்ப்புக்கிட்டியது.

அறங்காவலர்களின் பிள்ளைகள் அனைவரும் எனது மாணாக்கள். அவர்கள் பட்டதாரிகளாக, கல்லூரி அதிபராக உயர்வு பெற்றுள்ள நிலையில் தமது பூசைப்பாரம் பரியங்களைக் கைவிடாது தொடர்ந்து பணியாற்றியதைக் கண்டு பூரிப்படைகின்றேன். எம் மண்ணில் பெருந்திருவிழாக்கள் நடைபெற்ற சுன்னாகம் ஐயனார் கோயில் பல வரலாறுகளைக் கொண்டது. ஐயனார் பக்தர்கள் முன்னிலையில் நடமாடும் தெய்வம் எனக் கூறுவார்கள். கனவிலும் நனவிலும் ஐயனார் பல்வேறு உருவங்களில் நடனமாடி ஆறுதல் செய்வது வழக்கம். இவ்வனுபூதியை பலரும் கூறி மகிழ்வார்கள். ஆலய புனருத்தானப்பணியில் அயராது உழைத்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நல்லாசிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்,**
**தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை.**



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

சுன்னாகம்தாளையடி ஐயனார் ஆலய மஹா கும்பாபிஷேக சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன். சிவபூமி எனப் போற்றப்படும் இலங்கை, சிவவழிபாட்டு மரபுடன் போற்றப்படுகின்றது. திருமுறைகளும் புராண படனங்களும் சமுதாயத்தின் காப்பரண்களாக விளங்குகின்றன. சிவ வழிபாட்டு மரபுடன் இணைந்ததாகக், குலதெய்வ வழிபாடாக பல்வேறு தெய்வங்களும் பாரம்பரிய மரபுகளுடன் காலம் காலமாக வழிபடப்பெற்று வருகின்றன.

இம் மரபின் தொடர்ச்சியாகவே சுன்னாகம் தாளையடி ஐயனார் ஆலயம் ஆகும். சிவாகம மரபுகளின்படி பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒவ்வொரு ஆலயமும் திருப்பணிகள் செய்யப்பெறுவது வழக்கமாகும். இம்மரபினை ஜீரணோத்தாரணம் என்பனர். இதுவே புனராவர்த்தனமாக இறைவனது சான்னித்தியம் பெருகுவதற்காக பல்வேறு நிலைகளிலும் திருப்பணிகள் நடைபெற்று பதினேழு குண்டங்கள் அமைந்து மஹா கும்பாபிஷேகம் நிகழ்வது இறைவனின் மேலான கருணையாகும். மஹா கும்பாபிஷேகம் எனப்படுவது அறுபத்திநான்கு கிரியைகளினுடைய தொகுதியாகும். இக் கிரியைகளில் வழிபடுவோராகிய பக்தர்களுக்குப் பல்வேறுவிதமான பங்குகளும் பங்களிப்புகளும் உள்ளன. அவற்றுள் எண்ணைக் காப்பு சாத்துதல் பக்தர்களின் வேண்டுதல்களின் பேறாக அமைகின்றது. மஹா கும்பாபிஷேகத்தினைக் காணும் பேறு வாழும் காலத்தில் கிடைத்த பெறுதற்கரிய பேறாகும்.

**பேராசிரியர் சி.சிறிசற்குணராசா,**
**துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## ஆலய வ

கிராமப்புற மக்களால் மிக நீண்ட காலமாக வணங்கப்ப
தெய்வம், ஊர்த்தெய்வம் எனப் பெயர் பெறுகின்றன. அவ்வ
முறைக்கு அடுத்ததாக முக்கியத்துவம் பெற்று விளங்கும் கிராமி
பெற்று விளங்குகின்றது. இவ் வழிபாட்டின் வழியிலே வெள்ளி
யாழ்ப்பாணத்தின் புராதன இராசதானியில் இன்றைய கந்த
விளங்கி வந்துள்ளார். ஐரோப்பியர்கள் தம் மதத்தைப் பரப்ப வந்
எமது ஐயனார் ஆலயமும் அழிந்ததாகக் கருதப்படுகின்றது.
பகுதியைத் துப்புரவு செய்து பயிர்செய் நிலமாக்க முற்பட்ட போ
ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இவ் விக்கிரகத்தின் அளவு, அ
அளவையும், அழகையும் ஊகித்தறிய முடிகின்றது. நெற்செய்
பயிர்செய் நடவடிக்கைகளின் போதே ஐயன் வெளிப்பட்டுள்ளார்.
காணப்பட்ட மருத மரத்தின் அடியில் எழுந்தருளுவித்தாள். பின்
கணவனும் பூசை வழிபாடாற்றி வந்தார். இவளது கணவனே
ஆகம முறைசாராத ஒன்றாக ஆரம்பித்தது.

ஐயனார், வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருதமர நில
ஐயனாருக்கு நெய்தல் நிலத்து மரமாகிய தாழை தலவிருட்சமா
வயல் விளைந்ததும் முதல் அறுவடையை வயற்கிழவன் ஐய
காலத்திலேயே வயல் விளைச்சலை யாரும் கேளாமலே கா
கிராமியத் தெய்வ வழிபாட்டிற்கமைய புத்தரிசியில் பொங்கி, ம
ஆடியும் பாடியும் துதித்து வழிபாடியற்றியுள்ளனர்.


பெரிய பூசாரியார் தன்னுடைய காலத்திலேயே ஐயனுக்
இதற்கு பூதர் எனும் பெருந்தகை கைகொடுத்து உதவினார்.
புண்ணிய முகூர்த்தத்தில் கல்லாலான கோயில் கட்டும் திருப்
மண்டபம், ஸ்தம்ப மண்டபம், மண்டபம், வீரமாகாளர் சந்நிதி
ஆனால் முதலாவது பெருஞ்சாந்தி நிகழ்வு நடைபெற்றமை
திருக்குடமுழுக்கு நடைபெற்றமையை அறியக்கூடியதாக
கோயில்களும் திருமஞ்சனக் கிணறும் அமைக்கப்பட்டது.
தலைமையில் நவகுண்ட யாகசாலை அமைத்து கும்பாபிசேக

கடவுளர் சிலைகளின் தெய்வீகத் தன்மையைப் புதுப்பி
மேற்கொள்ளப்பட வேண்டும். அதனடிப்படையில் 1977 ஆம்
சூழ்நிலை காரணமாக நடைபெறவில்லை. பின்னர் 1984
குருமணி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் அவர்களின் த
ஆண்டு இந்திய இராணுவத்தினரின் எறிகணைகளால் சேத
சோ.சந்திரகாந்தக் குருக்களின் தலைமையில் கும்பாபி
பெருஞ்சாந்தியானது 2010ஆம் ஆண்டில் முத்தமிழ் குருமணி
மகனான சிவசிறி. சர்வேஸ்வர சிறிக்காந்தக்குருக்கள் ஆகியே
இருந்த ஆலயத்தின் மகோற்சவ தினங்கள் 13ஆக மாற்றிய

இவ்வாலயத்தில் மூன்று காலப் பூசைகள் நடைபெறுகின்
அபிசேக ஆராதனைகள் இடம்பெற்று சுவாமி உள்வீதி உலா வ
வருகின்றன. இவ்வாலயத்தின் மணவாளக்கோல விழாவா
இடம்பெறுகின்றது. அன்று காலையில் சங்காபிசேக நிகழ்வும்
ஆம் ஆண்டு தொடக்கம் சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்
பெண் வீடாகவும் கருதி மாப்பிள்ளை அழைத்து வந்து
இவ்வாலயத்தின் விசேட பூசைத் தினங்களாக சித்திரா பெ
திருவெம்பாவை போன்றவற்றைக் குறிப்பிடலாம்

இவ்வாலயத்தின் மகோற்சவமானது பங்குனி உத்தர
நடைபெற்று வருகின்றது. மகோற்சவமானது 1900 ஆம் ஆ
வருகின்றது. 1910 ஆம் ஆண்டில் முதன்முதலாக கன்னிக
6ஆம் திருவிழாவான வசந்தோற்சவத் திருவிழா, 7ஆம் திரு
வேட்டைத் திருவிழா, 10ஆம் திருவிழாவான தேர்த்திருவி
திருவிழாவான சண்டேஸ்வரர் உற்சவம் என்பன சிறப்பாக நட
தீர்த்தக் கேணியில் தீர்த்தோற்சவ நிகழ்வு இடம்பெறுகின்றது.
சனிக்கிழமை அன்று பூசை கொடுத்தல் எனும் சிறப்பு வழிப
பொங்கல் விழா இடம்பெறும். இது ஆகமம் சாராத வழிபாட்டு
வீரமாகாளருக்கு ஆடு பலியிடப்பட்டது. பிற்பட்ட காலத்தில் உயி
1950 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது. தற்போது அடியவர்க
என்பவற்றை வழங்குகின்றனர். பின் அவை ஏலம்கூறி விற்கப்
8 ஆம் மடை நிகழ்வும் அதற்கு அடுத்த நாள் பிராயச்சித்த அபி

இவ்வாலயத்தின் மீது பாடப்பெற்ற பிரபந்தங்களில் ஸ்ரீமான்
ஐயர் அவர்களின் கீர்த்தனைகள், அம்புலித்தூது என்பன மிகவு
காலங்களில் தாழையம்பதிகம், தாழையம்பதியின் இசைத்
இசைப் பேழைகளும் தாழைமலர் எனும் நூலும் வெளியிடப்
பூசாரியார் என்பவரின் பின் கதிரவேலுப் பூசாரியார், பெரிய
பூசாரியார், வாமதேவன் பூசாரியார் என்போரைத் தொடர்ந்து க
மகன்மார் இணைந்து பூசைகளைச் சிறப்புற மேற்கொண்டு
அடியவருக்காகக் கோடேறியமை, மருதமரக் கிளைகளை
வேள்விக்காக வளர்த்த கடாவைக் களவாடியவருக்கு கண் பார்
தோன்றி தன்னைத் தூது பாடுமாறு பணித்தமை, தேர்த் திரு
மூடைகள் இருப்பதாகக் கனவில் கூறியமை, ஐயனை எள்ளிந
போன்றவற்றைக் குறிப்பிடலாம். எமது கலாசாரத்தின் அடை
புஷ்கலை சமேத அரிகரபுத்திர ஐயனார் ஆலயமானது எமக்
அளிக்கின்றது.



EUT Modern Furniture
No.150, K.K.S Road, Chunnakam
Hotline: 077 4784 376

Excellent Tex
S.Vijikaran: 077 527 9228
#59, 61 K.K.S Road, Chunaakam.
T.P: 021 224 2261

Ria Fashions.com
No.32, Subramanijam Road, Chunnakam.
021 224 2332

Siththevinay
No.22, K.K.S
T.P/Fax: 021 224 2463

JEYA KRISHNA
No.20, K.K.S Road, Chunnakam
021 224 0221

Vishnukarans Fancy
No.8, New Market, Chunnakam.
Tel: 021 224 0013, 021 224 2423

VFT Furniture
No.162, K.K.S Road, Chunnakam.
Tel: 021 224 2494, 077 288 1492

Kajan
No.02, New Mark
Tel: 077

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...புத்திர ஐயனார் தேவஸ்தான புனராவர்த்தன ஸப்தாதச குண்டபக்ஷ (17 குண்டபக்ஷ)

# ...விஞ்ஞாபன சிறப்பு மலர் -2025

## ... வரலாறு


...ணங்கப்பட்டு வரும் கிராமியக் கடவுள்கள் குலதெய்வம், காவற்
... அவ்வகையில் மிகவும் தொன்மையான இயற்கை வழிபாட்டு
...ம் கிராமியத் தெய்வ வழிபாட்டில் ஐயனார் வழிபாடு முக்கியத்துவம்
... வெள்ளிமலை எனப் போற்றப்படும் எமது சுன்னாகம் கிராமத்தில்
...றய கந்தரோடையின் கீழ்த்திசைக் காவற்தெய்வமாக ஐயனார்
... பரப்ப வந்தபோது, இடித்தழிக்கப்பட்ட சைவாலயங்களில் ஒன்றாக
...கின்றது. இதன் பின்னர் 19ஆம் நூற்றாண்டில் காடு மண்டிய
...ப்பட்ட போது பூரணை புஷ்கலை சமேதராக ஐயனார் விக்கிரகம்
...ளவு, அழகு என்பவற்றைக் கொண்டு அன்றிருந்த கோயிலின்
...நெற்செய்கை மேற்கொண்டிருந்த கன்னி என்னும் பெண்ணின்
...டுள்ளார். அப் பெண் அவ்விக்கிரகத்தை எடுத்து வயலோரமாகக்
...நாள். பின் தென்னோலையால் நிழலிட்டு, திருவிளக்கிட்டு இவளது
...னவனே பெரியார் பூசாரியார் எனப்படுகின்றார். இவ் வழிபாடானது

...ந்தமர நிலத்தில் எழுந்தருளியுள்ளார். மருத நிலத்தில் குடிகொண்ட
...விருட்சமாக விளங்குவது சிறப்பான ஒன்றாகும். இவ்வூர் மக்கள்
...வன் ஐயனாருக்கு வழங்கி வருகின்றனர். பெரிய பூசாரியாரின்
...ாமலே காணிக்கையாக ஐயனாருக்கு செலுத்தி வந்துள்ளனர்.
...பாங்கி, மடை பரவி, படையல் போட்டு, நேர்த்திக்கடன் செலுத்தி

... ஐயனுக்குக் கற்கோயில் கட்ட வேண்டும் என்று விரும்பினார்.
...வினார். 1907 ஆம் ஆண்டு ஆனி மாதம் 20 ஆம் நாள் சுப
...டும் திருப்பணி நிறைவுற்றது. கருவறை, அர்த்தமண்டபம், மகா
...ர் சந்நிதி என்பன வெள்ளைப் பொழிகற்களால் அமைக்கப்பட்டன.
...ற்றமை தொடர்பான தகவல்கள் கிடைக்கவில்லை. 1965 இல்
...டியதாக உள்ளது. இதன்போது பரிவார மூர்த்திகளுக்கான
...ப்பட்டது. சிவஸ்ரீ. நா.சோமஸ்கந்தக் குருக்கள் அவர்களின்
...ம்பாபிசேகம் நடைபெற்றது.
...ப் புதுப்பிக்க 12 வருடங்களுக்கு ஒரு தடவை கும்பாபிஷேகம்
...77 ஆம் ஆண்டு நடைபெறவேண்டிய கும்பாபிஷேகம் நாட்டுச்
...ர் 1984 ஆம் ஆண்டில் நடைபெற்றது. இந்நிகழ்வு முத்தமிழ்
...களின் தலைமையில் நடைபெற்றது. இதன் பின்னர் 1994 ஆம்
...ால் சேதமடைந்த ஆலயத்தைப் புனர்நிர்மாணம் செய்து சிவஸ்ரீ
... கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன் பின்னர் ஐந்தாவது
... குருமணி சிவஸ்ரீ. நா.சர்வேஸ்வரக் குருக்கள் மற்றும் அவரது
...ர் ஆகியோரால் நடாத்தப்பெற்றது. அன்றிலிருந்து 11 தினங்களாக
...மாற்றியமைக்கப்பட்டது.
...பெறுகின்றன. வாராந்த சனிக்கிழமைகளில் எம்பெருமானுக்கு
... உலா வருதலும் மகேஸ்வரப் பூஜையும் தொடர்ந்து இடம்பெற்று
... விழாவானது ஆனி மாதத்தில் வரும் விசாக நட்சத்திரத்தில்
...நிகழ்வும் மாலையில் திருக்கல்யாண நிகழ்வும் இடம்பெறும். 1984
... ஆலயத்தை மாப்பிள்ளை வீடாகவும் ஐயனார் ஆலயத்தைப்
... வந்து திருக்கல்யாணம் இடம்பெறுவது சிறப்பம்சமாகும்.
...த்திரா பௌர்ணமி, நவராத்திரி விழா, கார்த்திகை விளக்கீடு,

... உத்தரத்தை தீர்த்தோற்சவமாகக் கொண்டு 13 தினங்கள்
... ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே பக்தி பூர்வமாக நடைபெற்று
... கன்னிக்கால் நடும் நிகழ்வு ஆரம்பமானது. மகோற்சவத்தில்
...ஆம் திருவிழாவான காராம்பசு உற்சவம், 8 ஆம் திருவிழாவான
...ர்த்திருவிழா, 11ஆம் திருவிழாவான தீர்த்தோற்சவம், 12ஆம்
...ப்பாக நடைபெறும் உற்சவங்களாகும். பூரணைத் தீர்த்தம் எனும்
...கின்றது. 13 ஆம் நாள் மகோற்சவத்தின் பின்னர் அடுத்து வரும்
...ப்பு வழிபாடு இடம்பெறுகின்றது. மறுநாள் ஞாயிற்றுக் கிழமை
...ழிபாட்டு முறையையும் கொண்டு விளங்குகின்றது. ஆரம்பத்தில்
...தில் உயிர் வதைக்கு எதிராகப் பலர் குரல் கொடுத்ததால் பலியிடல்
...டியவர்கள் நேர்த்திக் கடன் தீரப்பதற்காக ஆட்டுக்கடா, கோழி
... விற்கப்படும். பொங்கல் விழாவுக்கு அடுத்து வரும் சனிக்கிழமை
...சித்த அபிசேகமும் நடைபெறும்
... ஸ்ரீமான் முத்துக்குமார கவிராயரின் ஊஞ்சற் பாமாலை, வீரமணி
...பன மிகவும் பழமையானவையாகக் காணப்படுகின்றன. பிற்பட்ட
... இசைத் தமிழ், சுன்னாகம் ஐயனாருக்கு ஒரு பாமாலை ஆகிய
...ளியிடப்பட்டன. இவ்வாலயப் பூசகர் பரம்பரையினராக பெரியார்
... பெரிய தம்பிப் பூசாரியார், ஐயாத்துரைப் பூசாரியார், கந்தசாமிப்
...ர்ந்து கந்தசாமிப் பூசாரியார், வாமதேவன் பூசாரியார் என்போரின்
...கொண்டு வருகின்றனர் எம்பெருமானின் அற்புதங்களாக; தன்
...ாகளை வெட்டியவருக்கு அதன் பிழையை உணர்த்தியமை,
...கண் பார்வை பறிபோனமை, பண்டிதர் பஞ்சாட்சரத்தின் களவிலே
...தேர்த் திருவிழாவிற்கு கஞ்சி வார்ப்பதற்கு வீதியோரத்தில் நெல்
... எள்ளிநகையாடிய பாதுகாப்பு உத்தியோகத்தரை தண்டித்தமை
...ன் அடையாளமாக விளங்கும் சுன்னாகம் தாழையடி பூரணை
...து எமக்கு ஆன்மீக சக்தியையும் வரலாற்றுப் பெருமையையும்





### திருப்பணிச்சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

இந்து சமுத்திரத்தின் முத்தெனத் திகழும், சிவபூமி எனப் போற்றப்படும் இலங்கைத் திருநாட்டின் வடபால் சைவப் பாரம்பரியம் மிக்கவர்கள் பூர்வீகமாக வாழும் யாழ்ப்பாணத்தின் சுன்னாக நகரிலே தாழையடி ஐயனார் எனப் பல அற்புதங்களை நிகழ்த்தி அருள்பாலித்து வரும் ஸ்ரீ பூரணை புஷ்கலை சமேத அரிகரபுத்திர ஐயனார் ஆலயமானது ஆலய தர்மகர்த்தாக்கள், பரம்பரைப் பூசகர்கள், பரிபாலன சபையினர், திருப்பணிச் சபையினர், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வசிக்கும் ஐயனார் அடியார்களின் ஒருமித்த பெருமுயற்சியினால் பாரிய பல திருப்பணிகளாகப் பரிவாரக் கோயில்கள், வசந்த மண்டபம், யாக மண்டபம், முன்வாசல் மண்டபம், சுற்றுக் கொட்டகைகள் முதலியவற்றில் பல பணிகளை நிறைவு செய்து அழகிய வர்ணம் தீட்டி நிகழும் மங்களமிகு குரோதி வருடம் தை மாதம் 18 ஆம் நாள் (2025 01.31) வெள்ளிக்கிழமை அன்று துதியை திதியும் சித்த யோகமும் சதய நட்சத்திரமும் கூடிய வேளையில் காலை 9.00 மணி முதல் 10.30 மணி வரையுள்ள சுப நேரத்தில் விநாயகர் முதலான பரிவார மூர்த்திகள் சகிதமாகக் கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. இறை ஆசியுடன் இனிதே கும்பாபிஷேகம் நடைபெற எல்லாம் வல்ல பூரணை புஷ்கலை சமேத அரிகரபுத்திர ஐயனார் பெருமானை வேண்டுகின்றோம்.

**ஆதீன இளவரசு, கந்தசாமி மணிவண்ணன் J.P**
**தலைவர்(திருப்பணிச்சபை), உப அதிபர், யா/மத்திய கல்லூரி.**



### ஐயனாரின் திருவருளும் குருவருளும் பெற்று வையத்தில் இன்புற்று வாழ்வோமாக!

சுன்னாகம் தாளையடி பூரணை புஷ்கலை சமேத ஸ்ரீ அரிகர புத்திர ஐயனார் தேவஸ்தான புனராவர்த்தன ஸப்தா தச குண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகப் பெருவிழா வெகுசிறப்பாக நடந்தேற ஐயனார் பெருமானுடைய இறையருளும் கைகூடியுள்ளது. சுன்னாகம் தாளையடிப் பதி தனிலே குல தெய்வமாக, காவல் தெய்வமாக, இஷ்ட தெய்வமாக வீற்றிருந்து அருளாட்சி புரியும் ஐயனார் தேவஸ்தானம் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயமாக இலங்கையின் வடபால் யாழ்ப்பாணத்தில் சுன்னாகம் தனிலே அமைந்து அருளாட்சி செய்கின்றது. புதுப்பொலிவுடன் இறையாட்சியுடன் மிளிரும் ஐயனார் பெருமானின் கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புடன் நடந்தேறுவதையிட்டு உவகையடைகின்றேன்.

ஐயனாருக்குப் பூர்ணாதேவி, புஸ்கலாதேவி என இரண்டு தேவியர் உள்ளனர். ஐயனார் தேவலோகத்தைச் சேர்ந்தவர். பூலோகத்தில் அவதரித்தவர். எனவே தேவலோகத்தைச் சேர்ந்த புஸ்கலாதேவியும் பூலோகத்தைச் சேர்ந்த பூரணாதேவியும் துணைவியராக உள்ளனர். இவர்களது தலையானது ஐயனாரின் தோள்பட்டை உயரத்தில் இருக்கும். ஐயனாரின் அருகில் உள்ள கையில் மலரைப் பிடித்தபடியும் ஐயனாரின் அருகில் உள்ள காலை மடித்துப் பீடத்தின் மீது வைத்துக் கொண்டு மற்றொரு காலை கீழே தொங்கவிட்டபடியும் அமர்ந்திருப்பார்.

தாளையடி உறைபவனின் கும்பாபிஷேகம் திருவருளைப் பொழிகின்ற நிகழ்வாக விளங்குகின்றது. மஹா கும்பாபிஷேகம் நடைபெறும் நாளில் இறைவனை வணங்குவோருக்கு முப்பத்து முக்கோடி தேவர்களும் ஆசி வழங்குவார்கள் என்பது வழி வழியாக இருந்து வரும் நம்பிக்கை. எம்பெருமான் தாளையடி ஐயனார் பெருமானின் கும்பாபிஷேக நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மண்டலாபிஷேகம் நிகழ்விலும் கலந்து ஐயனின் அருளைப் பெற்றுய்வோமாக.

**தேசகீர்த்தி, சமூக திலகம், லயன்.பாலசிங்கம் சுரேஸ்குமார் J.P**
**முன்னாள் பிரதேச சபை உறுப்பினர், வலிகாமம் தெற்கு.**



### அடியவர்கள் அனைவரிற்கும் ஐயனார் அருள் கிடைக்கட்டும்


கோயில்கள் நமது சொத்து. அவற்றைப் பாதுகாக்க வேண்டியது தமது கடமை. அதற்காக உருவாக்கப்பட்டதே கும்பாபிஷேக கிரியையாகும். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என ஔவையார் கூறியதன் காரணம் அவ்வூரில் தெய்வ அருள் இருத்தல் வேண்டும் என்பதாகும். எல்லோரிற்கும் ஏதேதோ கோரிக்கைகள் உள்ளன. அதில் சில அந்தரங்க கோரிக்கைகளை ஆண்டவனிடம் மட்டுமே சொல்ல முடியும். அவ்வகையில் கோயில் வழிபாடு மனித வாழ்வில் மிக முக்கியம் பெறுகின்றது.

சிவாகமங்களில் கூறப்படும் கிரியைகளில் மிக மிக முக்கியமானதும் அருளுக்கு அடிப்படையானதுமானது கும்பாபிஷேக கிரியையாகும். கும்பாபிஷேகம் என்பது குடத்துள் நீரைக் கட்டுதல் எனப் பொருள்படும். இறைவன் தடத்த நிலையில் இருந்து இறங்கி உயிர்களிற்கு அருள் வழங்க முற்படும் போது மண், நீர், தீ, காற்று, வான், திங்கள், கதிரவன் ஆகிய இடங்களை நிலையங்களாகக்கொண்டு எழுந்தருளியிருப்பார்.

மிக உயர்ந்த தத்துவத்தின் அடிப்படையில் பலவற்றைக் கொண்டு நிகழ்த்தப்படும் இந்த குண்டபக்ஷ மகாகும்பாபிஷேகப் பெருவிழா சிறப்பாக நடைபெற்று அனைத்து உயிர்களிற்கும் அருள் கிடைக்கவும் எல்லாம் வல்ல பூரணை புஷ்கலை சமேத ஸ்ரீ அரிகர புத்திர ஐயனாரின் பாதார விந்தங்களைப் பணிந்து தியானம் செய்து வேண்டுதல் புரிந்து அனைவரும் இக் கும்பாபிஷேகப் பெருவிழாவிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மண்டலாபிஷேக நிகழ்விலும் கலந்து ஐயனாரின் அருளினை பெற்றுய்வோமாக.

**இராசலிங்கம் கார்த்திகேயன்,**
**ஆசிரியர், யா/உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்.**


### தேவஸ்தான ஆதீனகர்த்தாக்களின் ஆசிச் செய்தி





இலங்கைத் திருநாட்டின் வடபால் சுன்னாகம் எனும் புனித பூமியிலே வயல்கள் சூழ மருத மரத்தின் கீழ் ஐயனார் பெருமான் பூரணை புஷ்கலை சமேதராக வீற்றிருந்து அருள்பாலித்து வருகின்றார். பன் நெடுங்காலமாகப் பல அற்புதங்களைச் செய்து வரும் ஐயனாரின் மகிமை மகத்தானது. ஐயனாரின் திருவிக்கிரகம் சுயம்பு லிங்கமாகப் போற்றப்பட்டு வருகின்றது. ஐயன் அடியில் அடைக்கலம் புகுந்து நோய்கள் நீங்கிச் சென்றோர். சந்தான வரம் பெற்றோர் என மகிழ்வடைந்தோர் அநேகர். இவ்வாறு காத்தற் கடவுளாகவும் குல தெய்வமாகவும் விளங்கிவரும் ஐயனார் பெருமானின் பூசைகள், விழாக்கள், வழிபாடுகள் என்பவற்றைத் திறம்பட நடாத்தி வந்த பரம்பரையில் நாமும் பணி செய்வதை எம் சந்ததிக்கு கிடைத்த பெரும் பாக்கியமாகவே கருதுகின்றோம். இவ்வாறு தாழையடிக் கிழவனாக விளங்கும் ஐயனார் பெருமானின் கோயில் திருப்பணிகள் சீரும் சிறப்பும் பெற நடைபெற்று கும்பாபிஷேகம் இனிதே நடைபெற எல்லாம் வல்ல அரிகரபுத்திர ஐயனார் பெருமானின் அருளாசி அனைவருக்கும் உரித்தாகட்டும்.

**சீ.ஐ.கந்தசாமி, பெ.வாமதேவன்,**
**ஆதீன கர்த்தாக்கள், ஐயனார் தேவஸ்தானம், சுன்னாகம்.**



### திருப்பணிச் சபை உபதலைவரின் வாழ்த்துச் செய்தி

கந்தபுராண கலாச்சாரம் எனப் போற்றப்படும் யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான நகரங்களில் ஒன்றானதும் சைவமும் தமிழும் தழைத்தோங்கி வேளாண்மையில் சிறந்து விளங்குவதுமான சுன்னாகம் பதி தனிலே தாழையடியில் வீற்றிருந்து அருளாட்சி புரிந்து எமக்கு அடைக்கலம் தந்து காத்திடும் தெய்வமான ஐயனார் பூரணை புஷ்கலை சமேத ஸ்ரீ அரிகரபுத்திர ஐயனார் தேவஸ்தான மானது வடபுலத்திலே பெரும் கோவிலாகத் திகழ்ந்து மஹா கும்பாபிஷேகப் பெருவிழா காண்கின்றது.

ஐயனார் தேவஸ்தானமானது இன்று பெரும் கோவிலாகத் திகழ்வதற்கு திருப்பணிச் சபையினர் மற்றும் ஊர் மக்கள், ஐயனாரின் அடியவர்கள் ஆகியோரின் பெரும் முயற்சியேயாகும். அந்தவகையில் கும்பாபிஷேக பெருவிழாவானது ஐயனாரின் அருளாசியுடன் இனிதே நடைபெற்று சகல அடியவர்களும் ஐயனாரின் கும்பாபிஷேகப் பெருவிழாவில் பங்கேற்று அருள் பெற வேண்டுகிறோம்.

**ஆதீன இளவரசு,**
**வாமதேவன் தர்சிகன்.**



### அடைக்கலம் காத்திட்ட ஐயனாரின் அருள் எல்லோரிற்கும் கிடைக்கட்டும்

"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு. நீருண்டு என்பது திருமுறை வாக்கு" இந்த மண்ணில் மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் இறைவனை நினைத்து தினமும் வழிபாடு செய்வது அவசியமானது. இந்த உலகத்தில் நம்மைப் பிறக்க வைத்து உண்பதற்கு உணவும், சுவாசிக்க காற்றும், குடிப்பதற்கு தண்ணீரும், குளிர்காய்வதற்கும் சமைப்பதற்கும் உதவும் நெருப்பையும் கொடுத்த வள்ளல் இறைவன். ஒவ்வொரு நொடியும் நாம் அவன் தந்த இயற்கை சக்திகளைப் பயன்படுத்தி வாழ்வாங்கு வாழ்கிறோம். அதற்குக் கடனாக அவனிடம் அன்பு கொண்டு வழிபாடு செய்வது நம் கடமை.

இறைவனுக்குக் கோயில் கட்டி வழிபடுவ்து வழக்கம். புதிதாக ஓர் ஆலயம் எழுப்பப்படும்போது. விக்கிரகங்களை ஆலயத்திலுள் பிரதிஷ்டை செய்வதோடு மட்டும் ஆலயம் முழுமை பெற்றுவிடுமா என்றால் நிச்சயமாக இல்லை அது எப்போது முழுமை பெறும்? ஆலயத்தில் "கும்பாபிஷேகம்" நடந்த பின்னர்தான் அது வழிபாட்டுக்கு உரிய ஸ்தலமாக முழுமை பெறுகிறது.

கும்பாபிஷேகத் தினத்தன்று ஆலயத்துக்குச் சென்று வழிபட்டால் முப்பது முக்கோடி தேவர்களின் ஆசி நமக்குக் கிட்டும். தவிர்க்க முடியாத காரணங்களால் கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்ள இயலாதவர்கள் 48 நாட்கள் நடக்கும் மண்டல பூஜையில் கலந்துகொண்டு நன்மைகளைப் பெறலாம். பிறவிப்பெரும்பயன் அடையலாம். ஒரு கும்பாபிஷேகத்தைக் காண்பது மூன்று ஜென்மங்களில் நாம் செய்த பாவத்தைப் போக்கக் கூடியது.

அந்த வகையில் பூரணை புஷ்கலை சமேத ஸ்ரீ அரிகரபுத்திர ஐயனார் தேவஸ்தான புனராவர்த்தன ஸப்தாதச குண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவினை சகல அடியார்களும் கண்டு ஐயனாரின் திருவருள் பெற்று இனிதே வாழ வேண்டும்

**பற்குணலிங்கம் நிஷாந்தன் J.P**
**ஆசிரியர், கிளி/பளை மத்திய கல்லூரி,**

...nayahar
Stationeries
...K.K.S Road, Chunnakam
...2463 Mobile: 077 344 9972

NEW KANNATHASAN FANCY
Mob: 077 3150 842, 077 3152 744
No.49, K.K.S Road, Chunnakam.
Tel: 021 224 0152, 021 224 3493

சின்னன்னை சுவீற் ஹவுஸ்
K.K.S Road, Chunnakam
Order Now - 077 213 0237

Fine Selection
No.77, K.K.S Road, Chunnakam.
Tel: 077 694 7704, 077 868 9375

...n Fancy
...y Market, Chunnakam.
...077 922 8366

DG ELECTRICAL
K.K.S Road, Mallakam
077 491 2567, 076 3402424

New Fashion park
No.33, K.K.S Road, Chunnakam
021 224 0012

GLOBE DIGITAL
IT Zone
Jet Motors Junction K.K.S Road, Chunnakam
Tel: 076 134 5670, 075 699 9222

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





எயிற்கின் ஸ்பென்ஸ் ட்ரவல்ஸ் தனது வெளிச்செல்லும் பயணச் சேவைகளை விரிவுபடுத்தும் முயற்சிகளில் ஒன்றாக சமீபத்தில் புதிய கிளையொன்றை யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்துள்ளது.



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 400 | 450 | 600 | 600 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 160 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 1300 | 1000 | 1000 | 1000-1100 | 1000 |
| தக்காளி | 400 | 350 | 250 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 240 | 220 | 200 | 200 |
| கோவா | 220 | 220 | 200 | 180 | 300 |
| கரட் | 300 | 350 | 350 | 380 | 480 |
| பூசணி | 120 | 100 | 150 | 80 | 200 |
| புடோல் | 200 | 200 | 200 | 150-170 | 200 |
| வாழைக்காய் | 150 | 140 | 150 | 100-150 | 200 |
| சின்ன வெங்காயம் | 450 | 380 | 300 | 350 | 700 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 250 | 200-220 | 300 |
| பாகற்காய் | 600 | 400 | 500 | 500 | 600 |
| வெண்டக்காய் | 200 | 450 | 250 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 180 | 120 | 200 |
| பயற்றங்காய் | 600 | 700 | 500 | 500 | 800 |
| லீக்ஸ் | 350 | 350 | 350 | 320 | 400 |
| பீற்றூட் | 550 | 400 | 400 | 280-300 | 500 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 800 | 800 |
| முருங்கைக்காய் | -- | 3000 | 1400 | -- | 2000 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 350-400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 450 | 300 | 300 | 450-500 | 500 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 120 | 50-70 | 200 |
| தேசிக்காய் | 200 | 300 | 250 | 100-150 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 250 | 180 | 150-230 | 200-250 |
| இராசவள்ளி | 600 | 500 | 500 | 500-600 | 800 |
| வெங்காயப்பூ | 450 | 300 | 400 | 230-300 | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 250 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 70 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 100 | [illegible] |

# இன்று ஒரு தகவல் 312



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## எவ்வுயிரும் தம்முயிர் போல்

ஒரு தந்தை தன்னுடைய பிள்ளையை மிகவும் தைரியசாலியாக வளர்க்கவேண்டும் என்று ஆசைப்பட்டார். அதற்காக அவனைக் கூப்பிட்டு வைத்து உபதேசம் செய்தார்.

இதோ பாரு. நான் உனது வயதில் இருக்கும் போதெல்லாம் எதற்கும் பயப்படமாட்டேன். மிகவும் துணிச்சலாக இருப்பேன். ஒரு நாள் ஒரு அப்பாவி எலியை ஒரு பூனை துரத்திக் கொண்டு ஓடியது. நான் உடனே என்ன செய்தேன் தெரியுமா? அந்தப் பூனையைப் பிடித்தேன். அதின் வாலிலே ஒரு பட்டாசு சரத்தைக் கட்டினேன். கொளுத்திவிட்டேன். படபட என்று வெடிக்க ஆரம்பித்தது. அது துள்ளிக் கொண்டு அங்கேயும் இங்கேயும் ஓடியிருக்குப் பாரு ஓட்டம் மிகவும் தமாஸ் என்றார் அப்பா.

இப்படி சொல்லிவிட்டுப் பையனைப் பார்த்து இதைக் கேட்கிற போது உனக்கு துணிச்சல் வருகிறதா என்று கேட்டார். ஆம் என்றான் பையன். எப்படி? என்றார் அப்பா. எலியை விரட்டியதற்காக பூனையின் வாலிலே பட்டாசு கொளுத்தினீர்கள் நீங்கள். பூனையை விரட்டியதற்காக உங்கள் கழுத்திலேயே பட்டாசு சரத்தை மாட்டினால் என்ன என்று தோன்றுகிறது எனக்கு என்றான் பையன். பையனுடைய துணிச்சல் அப்பாவையே நடுங்க வைத்துவிட்டது. அது சரி ஒரு அப்பா பிள்ளைக்கு இப்படியா உபதேசம் செய்வது?

எல்லோரிடமும் அன்பாகப் பழகுவது எப்படி என்று சொல்லிக் கொடுக்க வேண்டும். பிஞ்சு உள்ளங்காலிலே நஞ்சைத் தூவலாமா? ஒரு நாள் விநாயகர் ஒரு பூனையோடு விளையாடிக் கொண்டிருந்தார். அப்படி ஆசையாக விளையாடிக் கொண்டிருந்தபோது அவருடைய கை நகம் தவறுதலாக பூனையுடைய முகத்திலே பட்டதாம். அது ஒரு சிறிய கீறலை உண்டாக்கி விட்டது.

அப்பொழுது அவர் அதை ஒரு பெரிதாக நினைக்கவில்லை.

சிறிது நேரத்திலே விநாயகர் வீட்டுக்கு வந்தார். அவர் அம்மா பார்வதி தேவியைப் பார்த்தார். பார்வதி தேவி கன்னத்திலே விரலாலே கீறிய மாதிரி ஒரு அடையாளம் இருந்தது. விநாயகருக்கு அதிர்ச்சி! ஆச்சரியம்! நமது அம்மா இந்த உலகத்திற்கே தாயார். அப்பேர்ப்பட்ட அவர்கள் முகத்திலேயே கீறலை உண்டாக்கக் கூடியவர்கள் யாராக இருக்க முடியும் என்று யோசித்தார். தாயே உங்களது கன்னத்திலே இந்த வடு எப்படி ஏற்பட்டது என்று கேட்டார்.

குழந்தாய் இது நீ செய்த காரியம் தான். உன் கை நகம் கீறியதாலே ஏற்பட்ட வடு தான் இது என்றார் அவர். விநாயகர் திடுக்கிட்டுப் போய்விட்டார்.

எப்படி அது? நான் எந்த காலத்திலும் உங்களை அப்படிக் கீறியதாக எனக்கு நினைவு இல்லையே என்றார். விநாயகர் திகைத்துப் போய் நின்றார். பார்வதி தேவி சொன்னார். இதோ பாரு இந்த உலகத்திலே உள்ள எல்லா உயிர்களிலேயும் நான் இருக்கிறேன். நான் தான் இந்த உலகமாக இருக்கிறேன். ஆகையினாலே நீ யாரைத் துன்புறுத்தினாலும் அது உண்மையிலேயே என்னை துன்புறுத்தியதாகத்தான் வந்து முடியும் என்றார்.

விநாயகர் மனதிற்குள்ளே ஒரு வெளிச்சம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு அவர் யாரையுமே திருமணம் செய்து கொள்ளாததற்கு அது தான் காரணமாம். இந்த உலகத்திலே எல்லாத்தையும் தாயின் வடிவமாக அவர் பார்க்க ஆரம்பித்துவிட்டார்.

ஸ்ரீராம கிருஸ்ணர் இந்தக் கதையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

நபிகள் நாயகம் ஒரு தடவை ஒரு நாற்காலியிலே உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தாராம். அப்போ அவருடைய உடையில் ஒரு கீழ்ப் பகுதி தரையிலே படிந்து கிடந்திருக்கு. அங்கே விளையாடிக் கொண்டிருந்த ஒரு பூனை அதின்மேல் வந்து படுத்து தூங்கி விட்டது.

தொழுகை செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது. நபிகள் நாயகம் எழுந்து பார்த்தார். அப்போது தான் பூனை தன்னுடைய உடை மேல் படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பது கண்ணிலே பட்டது. பூனையுடைய தூக்கத்தைக் கலைக்க விரும்பவில்லை. அவர் தம் சகோதரியைக் கூப்பிட்டார். ஒரு கத்தரிக்கோலை எடுத்துக் கொண்டு வரச் சொன்னார். பூனை படுத்திருந்த உடைப் பகுதியை மட்டும் கத்தரித்து விட்டு அவர் தொழுகைக்குப் போய்விட்டார். பிற உயிர்களிடம் எப்படி அன்பு காட்ட வேண்டும் என்பதை பெரியவர்கள் எவ்வளவோ விதத்திலேயும் நமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இருந்தாலும்.

எத்தனைபேர் மனதிலே அது எல்லாம் உறைச்சிருக்கிறது? நாங்களும் எங்கள் ஆடை மேலே ஒரு பூனை படுத்திருந்தால் ஒரு கத்தரிக்கோலைத் தான் எடுத்துக் கொண்டு வரச் சொல்லுவோம். துணியை வெட்டுவதற்காக இல்லை. பூனையின் வாலை வெட்டுவதற்கு. ஒரு ஆள் மிகவும் பிரியமாக ஒரு பூனையை ஆற்றிலே குளிப்பாட்டிக் கொண்டிருந்தார். எப்படி? அந்தப் பூனையை ஆற்றுத் தண்ணீரிலே அமுக்கி அமுக்கி. அந்த வழியாக போன பெரியவர் ஒருவர் இதைப் பார்த்தார். இதோ பாருப்பா பூனையை இந்தமாதிரி ஆற்றுத் தண்ணியிலே அமுக்கி குளிப்பாட்டாதே. மூச்சுத் திணறி செத்துப் போய்விடும். என்று அட்வைஸ் செய்தார்.

நீ போய்யா உன் வேலையை பார்த்துக் கொண்டு. எனக்கு எல்லாம் தெரியும் என்றார். இவர். சரி என்று அவர் போய்விட்டார். கொஞ்ச நேரம் கழித்து அவரே அந்த வழியாகத் திரும்பி வந்து கொண்டிருந்தார்.

ஆற்றிலே பூனையைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தவன் அழுது கொண்டு உட்கார்ந்திருந்தான். பக்கத்திலே அந்தப் பூனை இறந்து கிடந்தது. இதைப் பார்த்தார் பெரியவர். நான் தான் அப்பவே சொன்னேனே. அந்தப் பூனையை ஆற்றிலே நனைக் காதே என்று அதைக் கேட்டிருந்தால் இப்படி ஆகியிருக்குமா என்றார். அந்த ஆள் கோபமாக இவரை முறைத்துப் பார்த்தார்.

அட போய்யா இந்தப் பூனை ஆற்றிலே குளித்ததாலே இறந்து போகவில்லை. குளித்ததன் பின்பு அதனுடைய உடம்பு ஈரமாக இருக்கிறதென்று அதை புளிந்தேன். அதனாலே தான் இப்படி ஆகிவிட்டது என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் மகாத்மாகாந்தியின் 77 ஆவது சிரார்த்ததினம் அனுஷ்டிப்பு



அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தியாவின் தேசபிதா மகாத்மா காந்தியடிகளின் 77 ஆவது சிரார்த்த தினம் நேற்று யாழில் அனுஷ்டிக்கப்பட்டது. யாழ். ஆஸ்பத்திரி வீதி மற்றும் அரியாலை காந்தி சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் உள்ள காந்தி திருவுருவச் சிலைகளுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப் பட்டது. சங்கத்தின் தலைவரும் வவுனியா பல்கலைக்கழக வேந்தருமான பேராசிரியர் சு. மோகனதாஸ், காந்தீயம் பத்திரிகை ஆசிரியரும் நிர்வாக சபை உறுப்பினருமான எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி, ஓய்வுநிலை அதிபர்களான க.செல்வக்குமாரன், செ.சுப்பிரமணியம் ஆகியோர் உட்பட சங்கத்தின் உறுப்பினர், பொதுமக்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர் இதன்போது காந்தீயம் சஞ்சிகையும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (6-8-33)

# வெளிநோயாளர் பிரிவின் சேவைகள் தடைப்பட்டமையால்

## நோயாளர்கள் அவதி; விரைந்து நடவடிக்கை எடுத்த ரவிகரன் எம்.பி

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு பிரதேச வைத்தியசாலையில் வைத்தியர் இன்மையால்நேற்று முன்தினம் சிறிது நேரம் வெளிநோயாளர் பிரிவின் வைத்தியசேவைகள் தடைப்பட்டமையால் நோயாளர்கள் சிரமத்திற்கு உள்ளாகி இருந்தனர்.

இந்நிலையில் இது குறித்து பொதுமக்களால் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கு முறையிடப்பட்டதையடுத்து, பாராளுமன்ற உறுப்பினர் இது குறித்து முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் தொலைபேசியில் கலந்துரையாடி பிறிதொரு வைத்தியரை வைத்திய சேவையில் ஈடுபடுத்துவதற்குரிய நடவடிக்கையினை மேற்கொண்டார்.

அதேவேளை உடனடியாக வைத்தியசாலைக்கு நேரடியாகச்சென்று வைத்தியசேவையில் ஈடுபட்டிருந்த வைத்தியருடன் கலந்துரையாடியதுடன், வைத்திய சேவைகளைப் பெறுவதற்கு வந்த பொதுமக்களுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டு அவர்களின் குறைபாடுகளையும் கேட்டறிந்தார்.

மேலும் இங்கு நிலவும் மருத்துவத் தேவைகள், வைத்திய ஆளணிப் பற்றாக் குறைகள் உடனடியாகத் தீர்க்கப்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.(6-8-299)





வடமாகாண கல்வி அமைச்சின் அனுமதியுடன் யாழ்.பழைய மாணவச்சிப்பாய் அமைப்பினால் நெடுந்தீவு மகாவித்தியாலய மாணவர்களிற்கு ஒரு நாள் தலைமைத்துவப் பயிற்சி பாசறையானது கடந்த 24, 25 ஆகிய இரு தினங்கள் குறித்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சிவானந்தர் கஜவதனனின் வழிகாட்டலில் இடம்பெற்றது.

இதன்போது 120 மாணவர்கள் பங்குபற்றி இருந்தனர். நிகழ்வின் இறுதியில் தேசிய மாணவர் படையணியின் வடமாகாண பிரதிப் பணிப்பாளர் lt.Col.RHNP.Rathnaweera மாணவர்களுக்கான சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.

# ஓய்வூதியத் திட்டத்தில் முதலிடம் பெற்ற யாழ். மாவட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத்திட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டம் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றதுடன் தொடர்ச்சியாக 11 தடவைகள் முதலாமிடத்தினை தக்க வைத்துள்ளது என யாழ் மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ்.மாவட்டச் செயலக ஊடகப் பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

தேசிய விருதுக்கான தெரிவில் நல்லூர், பருத்தித்துறை, கோப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய நான்கு பிரதேச செயலகங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளது எனவும் யாழ் மாவட்டத்தில் தனிப்பட்ட அடைவு மட்டங்களில் கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக 9 உத்தியோகத்தர்கள் தேசிய விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும் யாழ் . மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார். (6-8-33)

# இந்துபுரம் கிராமத்திலுள்ள காணிகளை அபகரிக்க முயற்சி

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இந்துபுரம் கிராம மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளை அபகரிக்க கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் திட்டமிட்டுவருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கனகாம்பிகைக் குளத்தின் ஒதுக்கீட்டுக் காணிகள் எனத் தெரிவித்து முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட எல்லைக் கிராமங்களில் ஒன்றான இந்துபுரம் கிராமத்திலுள்ள மக்களின் தனியார் உறுதி மற்றும் அரச உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்ட காணிகள் மக்கள் குடியிருக்கின்ற வீடுகளுடன் அபகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு- ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இந்துபுரம் கிராமத்தில் கடந்த 1997 ஆம் ஆண்டு தொடக்கம் மக்கள் குடியேறி வசித்து வருகின்றனர்.

அந்தவகையில் கடந்த 1993ஆம் ஆண்டு இந்துபுரம் கிராம மக்களின் காணிகளுக்கு அரசகாணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.இந் நிலையில் நிலஅளவைப் படிவங்களைக் காணவில்லை எனத் தெரிவித்து கடந்த 2010ஆம் ஆண்டில் மீண்டும் இந்துபுரம் கிராம மக்களின் காணிகள் அளவீடு செய்யப்பட்டு காணி அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்பிற்பாடு கனகாம்பிகைக் குளத்திற்குரிய ஒதுக்கீட்டுக் காணிகள் அளவீடு செய்யப்பட்டு அவற்றுக்கு முறையாக எல்லைக் கற்கள் இடப்பட்டதுடன், மக்களின் காணிகளும் அளவீடு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்ட அரசகாணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதுடன், அதன்பிற்பாடு தனியார் உறுதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு முறையான அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு மக்களிடம் பகிர்ந்தளிக்கப்பட்ட தனியார் உறுதி மற்றும் அரசகாணி அனுமதிப் பத்திரங்களுள்ள காணிகளையே கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் மீண்டும் அளவீடுசெய்து, எல்லைக்கற்களையிட்டு அங்கு வசிக்கும் 65 குடும்பங்களின் காணிகளை அபகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழலில் அப்பகுதி மக்களின் முறைப்பாட்டிற்கமைய, இந்துபுரம் கிராமத்திற்குச்சென்ற வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நிலைமைகள் குறித்து ஆராய்ந்ததுடன், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் குறித்த செயற்பாட்டிற்குத் தனது கடுமையான எதிர்ப்பினை தெரிவித்ததோடு இதுதொடர்பில் உரிய தரப்பினருடன் பேசி இந்த ஆக்கிரமிப்புச் செயற்பாட்டைத் தடுப்பது தொடர்பில் கவனஞ் செலுத்தப்படுமெனவும் தெரிவித்தார். (6-8-299)

# பாதிக்கப்பட்ட வயல்களை பார்வையிட்ட அதிகாரிகள்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வயல் நிலங்களை கமநல காப்புறுதிச் சபை உத்தியோகத்தர்கள் மற்றும் கமநலசேவை நிலைய உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் சென்று பார்வையிட்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் அறுவடைக்கு தயாரான பல வயல் நிலங்கள் மழையினாலும் இரணைமடுக் குளத்தினுடைய வான் கதவுகள் திறந்து விடப்பட்டமையினாலும் அழிவடைந்திருந்தன.

இதன்போது கமநல காப்புறுதிச்சபை மற்றும் கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்கள் கண்டாவளை, முரசுமோட்டை, பன்னங்கண்டி, உருத்திரபுரம், பெரியகுளம் உள்ளிட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டனர்.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக அழிவடைந்த பகுதிகளையும் பார்வையிட்டு வருகின்றனர். (6-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






அப்படியிருக்கும்போது நீ இளவரசரைப் பற்றி ஒரு விபரமும் சொல்லமாட்டேன் என்று கூறினாய். அதிலிருந்து வெளியாவது என்ன? இளவரசர் இறக்கவில்லையென்பது உனக்குத் தெரியும் என்ற எண்ணம் ஏற்படுகிறது. அவரைப் பார்ப்பதற்கு நீ நாகைப் பட்டினம் போகிறாய் என்று நான் சொன்னதையும் நீ மறுக்கவில்லை. 'இறந்துபோன இளவரசரை நான் எப்படிப் பார்க்க முடியும்?' என்று நீ திருப்பிக் கேட்கவில்லை. 'நாகைப் பட்டினம் போகவில்லை, வேறு இடத்துக்குப் போகிறேன்' என்றும் நீ சொல்லவில்லை. ஆகையால் நாகைப் பட்டினத்தில் இளவரசர் உயிரோடு இருக்கிறார் என்பதையும் அவரைப்பார்க்கப் போகிறாய் என்பதையும் ஒப்புக் கொண்டு விட்டாய். மிச்சம் நீ சொல்ல வேண்டிய விபரங்கள் இரண்டே இரண்டு தான்! நாகைப்பட்டினத்தில் இளவரசர் எங்கே இருக்கிறார் என்று சொல்ல வேண்டும் அந்தச் செய்தி உனக்கு எப்படித் தெரிந்தது என்றும் கூற வேண்டும். இந்த இரண்டு விபரங்களையும் நீ கூறி விட்டால் அப்புறம் ஒருகணங் கூட இங்கே தாமதித்து இந்தக் கிழவனோடு பேசிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. உனக்கு எங்கேபோக விருப்பமோ அங்கே போகலாம்.

வானதியின் உள்ளம் இப்போது அடியோடு கலங்கிப் போய் விட்டது. முதன் மந்திரி கூறியது உண்மை என்றும், தன்னுடைய அறியாமையினால் இளவரசரைக் காட்டிக் கொடுத்து விட்டதாகவும் உணர்ந்தாள். தான் செய்து விட்ட குற்றத்துக்குப் பிராயச் சித்தம் உண்டா? கிடையவே கிடையாது! உயிரை விடுவதைக் தவிர வேறு ஒன்றுமில்லை.

"ஐயா! தாங்கள் என் பெரிய தந்தையின் நண்பர் என்று சொன்னீர்கள். என்னைத் தங்கள் மகள் என்றும் உரிமை கொண்டாடினீர்கள். தங்களை ஒன்று கேட்டுக் கொள்கிறேன். நான் நாகைப் பட்டினம் போகவும் விரும்பவில்லை. பழையாறைக்குப் போகவும் விரும்பவில்லை."

கொடும் பாளூருக்குப் போக விரும்புகிறாயாக்கும், அது நியாயந்தான். அங்கேயே உன்னைக் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கிறேன்.

"இல்லை, ஐயா! கொடும்ளூர் போகவும் நான் விரும்பவில்லை. இந்த உலகத்தை விட்டு மறு உலகத்துக்குப் போக விரும்புகிறேன். தங்களுடைய ஆட்களிடம் சொல்லி அதோ தெரியும் பலி பீடத்தில் என்னைப் பலி கொடுத்து விடச் சொல்லுங்கள்! நான் தயாராக இருக்கிறேன்!" என்று சொன்னாள்.

"தாயே! உன்னுடைய விருப்பம் எதுவோ அதை நிறைவேற்றி வைப்பதாகச் சொன்னேன். ஆகையால் மறு உலகத்துக்குத்தான் நீ போக வேண்டுமென்றால் அங்கேயே அனுப்பி வைக்கிறேன். ஆனால் அதற்கு முன்னால் என்னுடைய கேள்விகளுக்கு விடை சொல்லியாக வேண்டும்!"

"ஐயா! என்னை வீணில் துன்புறுத்த வேண்டாம். நான் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லப் போவதில்லை. என்னைத் தங்கள் மகளாகக் கருதுவதாய்ச் சற்றுமுன் தாங்கள் சொன்னது உண்மையாயிருந்தால்.."

"மகளே! அதில் யாதொரு சந்தேகமுமில்லை. உன்னை நான் பெற்ற மகளாகவே கருதுகிறேன். உன் குடும்பத்தார் எனக்கு எவ்வளவு வேண்டியவர்கள் என்பது ஒருவேளை உனக்குத் தெரிந்திராது! உன் பெரிய தந்தையும், நானும் நாற்பது ஆண்டுகளாகத் தோழர்கள். ஆனால் இராஜாங்க காரியங்களில் சிநேகிதம், உறவு என்றெல்லாம் பார்ப்பதற்கில்லை. பெற்ற தந்தை என்றும் பார்க்க முடியாது. அருமைக் குமாரி என்றும் பார்க்க முடியாது.

ஏன்? சக்கரவர்த்தியின் காரியத்தையே பார்! தமது சொந்தக் குமாரன் இராஜாங்கத்துக்கு விரோதமாகச் சதி செய்தபடியால், அவனைச் சிறைப்படுத்திக் கொண்டு வரும்படி கட்டளையிட வில்லையா?".

(தொடரும்)




## செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்பது சிறந்தது



(நேற்றைய தொடர்ச்சி)

அது உன் சிறந்த பண்பு. உன்னை மன்னித்து விட்டேன். என்று கூறியதோடு அப் பெண்ணுக்கு இரண்டு பசுக்களையும் கைச் செலவுக்கு பணத்தையும் கொடுக்க ஆணையிட்டார்.

சுற்றி இருந்த காவலர்கள் மன்னரை நோக்கி, "அரசே தங்களை கல்லால் அடித்தவளை மன்னித்தது டன் அவளுக்கு பரிசும் தருகிறீர்கள் இச் செயல் எங்களுக்கு வியப்பு அளிக்கிறது" என்றனர்.

காவலர்களைப் பார்த்து மன்னர் காவலர்களே, அறிவற்ற மரம் கல்லால் அடித்தால் பழம் தருகிறது. அவ்வாறு இருக்க அறிவுள்ள நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?. மேலும் அவள் வேண்டுமென்று என்னை கல்லால் அடிக்கவில்லை.

பழங்களை உதிர்க்கவே கல்லால் அடித்தால் அது தவறுதலாக என் மீது பட்டு என்னை காயப்படுத்தியது. அவள் தான் செய்த தவறுக்கு வருந்தி என்னிடம் மன்னிப்பு கேட்டாள்.

அது மட்டுமல்ல அவள் தன் பிள்ளைகளின் பசியைப் போக்கவே மரத்தின் மீது கல் எறிந்தாள். அது தாயாகிய அவள் கடமை அல்லவா. அவள் அவளுடைய பிள்ளைகளுக்காக அவ்வாறு செய்தாள்.

நான் என் குடிமக்களுக்காக அவளுக்கு பரிசு வழங்கினேன் என்றார். காவலர்கள் மன்னரின் விளக்கம் கேட்டு பெரு மகிழ்ச்சி அடைந்தனர்.

நீதி : செய்த தவறுக்கு வருந்தி மன்னிப்பு கேட்பது சிறந்த குணமாகும். எனவே, நாம் தெரியாமல் தவறு செய்திருந்தால் உரியவரிடம் மன்னிப்பு கேட்டுப் பழக வேண்டும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் அன்புள்ளம் கொண்ட, இனிய மற்றும் ஒத்துழைப்புக் கொடுப்பவர்களின் துணை விலை மதிப்பற்றது. – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாவை சேனாதிராஜா தமிழர் அரசியலில் ஒரு வரலாறு

மாவை சேனாதிராஜா தமிழர் அரசியலில் மறக்க முடியாத பெயர். தமிழ் மக்களுக்காக தமிழரசுக் கட்சி தனது அரசியல் பணியைத் தொடங்கியபோது அந்தக் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு தன் வாழ்நாள் முழுவதையும் தமிழ் மக்களுக்காக அர்ப்பணித்தவர்.

தமிழ் மக்களின் உரிமைக்காக அவர் குரல் கொடுத்ததன் காரணமாக, சிறைவாசத்தை அனுபவித்தார்.

சிறையில் இருந்து அவரும் அவருடன் இணைந்து காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன் ஆகியோரும் விடுதலை பெற்ற போது, சிறை மீண்ட செம்மல்கள் என்ற உணர்வோடு தமிழ்த் தேசம் அவர்களை வரவேற்று உற்சாகம் அளித்த அந்த நிகழ்வு இன்னமும் நம் மனத்திடை ஆழப் பதிந்துள்ளது.

நீண்ட நெடுங்காலம் தமிழர் அரசியலில் மாவை என்ற பெயர் பேசுபடுபொருளாயிற்று.

உண்மை. தந்தை செல்வநாயகம், தளபதி அமிர்தலிங்கம் என்ற உன்னதமான அரசியல் தலைவர்களின் பாசறையில் வளர்ந்த மாவை சேனாதிராஜாவின் அரசியல் பயணம் நீண்டது. நேர்மையானது. இதயசுத்தியானது.

இவை இலங்கைத் தமிழரசுக் கட்சியில் ஆத்மார்த்தமான தலைவர்கள் இருக்கும் வரை நீடித்தது.

என்ன செய்வது காலங்கள் எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை.

பட்டாபிஷேகத்துக்கு நாள் வைத்தபோது தான் தசரதர் துன்பப்பட்டு தன்னுயிரை இழக்க வேண்டியதாயிற்று.

ஆம், அரசியல் நீரோட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி உள்ளக முரண்பாடுகளைக் கடுமையாகச் சந்தித்துக் கொண்டது.

கட்சியின் பெருந்தலைவராக மாவை சேனாதிராஜாவை வைத்துக் கௌரவப்படுத்த வேண்டிய கடமையை தமிழரசுக் கட்சி செய்யத் தவறியது.

அதன் காரணமாக மாவை சேனாதிராஜா அவர்களின் இறுதிக்கால அரசியல் என்பது அவருக்குத் துன்பத்தைக் கொடுப்பதாகவும் மனநிறைவை அடைய முடியாமலும் அமைந்து போனமை துரதிர்ஷ்டமே.

இதையும் கடந்து தனது அரசியல் பயணம், அரசியலுக்கான தனது அர்ப்பணிப்பு, சிறையில் அடைபட்டிருந்த அனுபவிப்புகள் இதற்கும் மேலாக, நம் மண்ணில் நடந்த விடுதலைப் போராட்டம், மக்களின் இழப்புகள் என மிகப் பெரும் துன்ப துயரங்கள் அவரைச் சூழ்ந்த போதும் தமிழ் மக்களின் அவலம் தீரவில்லையே என்ற வேதனையும் சேர்ந்து மாவை சேனாதிராஜாவை மீளாத் துயிலுக்கு ஆளாக்கிவிட்டது.

தமிழ் மக்களுக்கான அவரின் அரசியல் பணி இனி தமிழர்களின் அரசியல் வரலாற்றோடு சங்கமித்துக் கொள்ளும்.

தமிழ் மக்களோடு என்றும் இணைந்திருந்த மாவை சேனாதிராஜாவுக்கு தமிழ் மக்கள் தங்கள் மரியாதையைச் செலுத்தி அவரின் இறுதி யாத்திரைக்கு விடை கொடுக்கின்றனர்.

# மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அரசாங்கத்துடன் பேசிப் பயனில்லை

## ஐ.தே.க தவிசாளர் வஜிர

(கொழும்பு)

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அரசாங்கத்துடன் பேசிப் பயனில்லை என ஐக்கியத் தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

மக்களின் ஆணையை வலுப்படுத்துவோம் என்ற தொனிப் பொருளில் காலியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த அரசாங்கத்திற்கு ஆட்சியை ஒப்படைக்க வேண்டாம் என மக்களிடம் கோரிய போதிலும் மக்கள் அதனை உதாசீனம் செய்து விட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தைப் பேசிப் பயனில்லை எனவும் வாக்காளர்கள் பிழையான தீர்மானத்தை எடுத்து விட்டார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் 77 ஆண்டுகால சாபம் என்ற பிரசாரத்தின் ஊடாக ஆட்சியைப் பிடித்ததாகவும் தற்பொழுது அரசாங்கத்தை விட 77 ஆண்டு கால சாபம் மேலானது என அவர் தெரிவித்துள்ளார்.

77 ஆண்டு சாபத்தின் போது 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட தேங்காய் தற்பொழுது 300 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7)

# சுதந்திர தினக் கொண்டாட்டத்திற்கு 87 மில்லியன் ரூபா செலவு ....

இந்த ஆண்டு 77வது சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கான செலவு 87 மில்லியன் ரூபாவாக இருக்கும் என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சுதந்திர தின விழாவில் கலந்து கொள்ளும் விருந்தினர்கள் மற்றும் பிற குழுக்களுக்காக கட்டப்படும் குடிசைகளை அரசு தொழிற்சாலையிலிருந்து பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் இதற்கு 37 மில்லியன் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு சுதந்திர தினக் கொண்டாட்டங்களின் போது இராணுவ வாகனங்கள், பீரங்கி வாகனங்கள் போன்றவை அணிவகுத்துச் செல்லப்படாது என்றும், படைப்பிரிவு அணிவகுப்புகளுக்குப் பதிலாக, இராணுவத்தினரால் ஒரு அணிவகுப்பும், பொலிஸாரால் ஒரு அணிவகுப்பும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

அண்மையில் நடைபெற்ற சுதந்திர தின விழாவிற்காக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு டாங்கிகள் கொண்டு வரப்பட்டன, மேலும் ஒவ்வொரு டாங்கிற்கும் எரிபொருளுக்காக நான்கு இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த ஆண்டு சுதந்திர தினக் கொண்டாட்டத்திற்காக சுதந்திர தின நினைவு இதழ் அச்சிடப்படாது என்றும் கூறப்படுகிறது.

இந்த ஆண்டு சுதந்திர தின விழா பொதுமக்களின் பங்கேற்புடன் எளிமையாகவும் புனிதமாகவும் நடைபெறும் என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

# போதைப்பொருளுடன் வவுனியாவில் பெண் கைது

வவுனியாவில் போதைப்பொருளுடன் பெண் ஒருவரைக் கைது செய்துள்ளதாக பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மடுகந்தை விசேட அதிரடிப்படையினரினால் செட்டிகுளம் பகுதியில் வைத்து 51 வயதுடைய பெண் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

இவரிடம் இருந்து 1740 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 2380 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் பூவரசங்குளம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விசாரணைகளின் பின் குறித்த பெண்ணை நீதிமன்றில் முற்படுத்த பூவரசங்குளம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,250)

# நைஜீரியப் பிரஜை கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

போலியான கானா கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இலங்கையிலிருந்து தப்பிச் செல்ல முயன்ற நைஜீரியப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று முன்தினம் இரவு இந்தக் கைது இடம்பெற்றது.

சந்தேகநபர் 38 வயதுடைய நைஜீரியப் பிரஜையாவார்.

2019 ஆம் ஆண்டு குறித்த நபர் இலங்கைக்கு வந்துள்ளார். மேலும் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள இரண்டு வழக்குகள் மற்றும் கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள ஒரு வழக்கு தொடர்பாக நாட்டை விட்டு வெளியேறத் தடை விதிக்கும் வகையில் மூன்று விமானத் தடைகளுக்கு உட்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

# விபத்தை ஏற்படுத்திய கான்ஸ்டபிள் பணி நீக்கம்

(கொழும்பு)

இரத்மலானைப் பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்தியதோடு முச்சக்கர வண்டி மீது மோதிவிட்டு தப்பிச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

விபத்தில் சிக்கிய பொலிஸ் ஜீப்பும் முச்சக்கர வண்டியும் விபத்துக்குள்ளாகும் காட்சியும், பின்னர் ஜீப் நிற்காமல் தொடர்ந்து செல்வதை காட்டும் காணொளியொன்று சமீபத்தில் சமூக ஊடகங்களில் பரவியது.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரத்மலானைப் பகுதியில் இடம்பெற்றதாகவும், அதே நாளில் கல்கிசைப் பொலிஸார் இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்தி ஜீப் வாகனத்தை செலுத்திய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைக் கைது செய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது அவர் மதுபோதையில் வாகனம் செலுத்தியது உறுதி செய்யப்பட்டதோடு, சந்தேக நபர் கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கல்கிசைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு

அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று மேலும் அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ நாணய மாற்று விபரங்களுக்கு அமைவாக, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனைப் பெறுமதியானது நேற்று முறையே 292.45 ரூபாவாகவும் 301.15 ரூபாவாகவும் உள்ளது.

நேற்று முன்தினம் (29) அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனைப் பெறுமதியானது முறையே 292.92 ரூபாவாகவும் 301.60 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

மத்திய கிழக்கு உட்பட ஏனைய பிரதான நாடுகளின் நாணயங்களுக்கு நிகராகவும் ரூபாவின் பெறுமதி நேற்று அதிகரித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசை..மருந்தில்லா மருத்துவம்! செலவில்லா மருத்துவம்!!

# இசை மருத்துவம் (Music Therapy)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு

"மனசு சரியில்லை அதான் மனதுக்கு ஆறுதலா மெல்லிய இசைப் பாடல்களைக் கேட்கிறேன். மிகவும் சந்தோசமாக இருக்கிறேன் அதான் விறுவிறுப்பான பாடலைக் கேட்கிறேன்" என்று பலர் கூறுவதையும் செய்வதையும் நாம் அனுபவபூர்வமாக தினசரி வாழ்வில் கேட்கிறோம், பார்க்கிறோம்.

இரவு தூங்க முடியாமல் எதேனும் வயிறு கோளாறு ஏற்பட்டு கைவசம் மருந்தேதும் இல்லாத பட்சத்தில் ஹிந்தோள ராக பாடலை கேளுங்கள், பாடுங்கள். ராக ஆராய்ச்சியாளர்கள் இது நள்ளிரவில் பாடவேண்டிய ராகமென்றும் இந்த ராகத்தால் வாயுக்கோளாறு நீங்கும் என்றும் கூறுகின்றனர். இந்த ராகத்தில் வந்த பிரபல திரைப்பட பாடல்களான "ஓம் நமச்சிவாயா" - சலங்கை ஒலி, "பூவரசம்பூ பூத்தாச்சு"-கிழக்கே போகும் ரயில், "மல்லிகையே மல்லிகையே"- நினைத்தேன் வந்தாய், "மார்கழி பூவே மார்கழி பூவே"- மே மாதம் போன்ற பாடல்கள் மிகச்சிறந்த உதாரணங்களாகும்.

இசை, ஒரு மாமருந்து. இசை, மனித இதயத்தோடும் உணர்வுகளோடும் கலந்த ஒன்று. உடல் நலத்துக்கு யோகாவும், உடற் பயிற்சியும், விளையாட்டுகளும் எவ்வளவு அவசியமோ, அதே அளவு இசையைக் கேட்பதும், கற்பதும் மனநலத்துக்கு அவசியம். அதனால்தான், தாலாட்டு, காதல் பாட்டு, தெருக்கூத்து, மேடை நாடகப் பாடல், தெம்மாங்குப் பாட்டு, ஒப்பாரிப் பாட்டு, தெய்வீகப் பாட்டு, கச்சேரிப் பாட்டு, கோடாங்கிப் பாட்டு, குலதெய்வப் பாட்டு, திரையிசைப் பாட்டு என்று நமது வாழ்வின் எல்லா நிலைகளிலும் இசை இரண்டறக் கலந்துள்ளது.

போருக்குச் செல்லும் முன், முரசு முழங்கி, கொம்பு ஊதி, இசை மூலம் பரவசப்படுத்தி, உற்சாக மூட்டியதாக சங்க இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். மேலும், சங்க காலப் போரில் புண்பட்ட வீரனின் வலி குறைவதற்காக, வேப்பிலையை வீட்டில் செருகி, வீரன் கேட்க நல்ல இனிமையான யாழிசை, குழலிசை, மணியிசைக்குப் பெண்கள் காஞ்சிப்பண் பாடியதையும் அறிகிறோம். இசை, வலியைக் குறைக்க உதவும் என்பது சங்க காலத் தமிழரின் நம்பிக்கை. மேலும், பாணர், விறலியர், கூத்தர் போன்றோர் ஆழ்ந்த கவலையிலும், மனச்சோர்விலும், இருந்த அரசர்களையும், அமைச்சர்களையும் தம் இசையால் மகிழ்வளித்துள்ளனர்.

குழல், யார் போன்ற பூர்வீக இசைக் கருவிகள் காலப்போக்கில் வீணை, கிற்றார், வயலின் போன்ற கம்பிக் கருவிகளாகவும் புல்லாங்குழல், நாதஸ்வரம், கிளானிநெட், முகவீணை போன்ற காற்றுக் கருவிகளாகவும் பறை, முரசு, பம்பை, உடுக்கை, தவில் போன்ற தோல் கருவிகளாகவும் பரிணாம வளர்ச்சி பெற்றன. இக்கருவிகள் வாசிக்கப்படும் போது, காற்றில் கலந்து வரும் இசையால் அன்பு, கருணை, இரக்கம், அமைதி, அழுகை, கோபம், மகிழ்ச்சி, உற்சாகம் எனப் பலவித உணர்வுகள் தட்டி எழுப்பப்படுகின்றன. அக்பரின் அரசவையில் இருந்த இசைமேதையான தான்சேன் எனும் இசைக்கவிஞர், அணைந்த விளக்குகளை 'தீபக்' என்றொரு ராகத்தைப் பாடி மீண்டும் பிரகாசிக்க வைத்ததாகக் கூறப்படுவதுண்டு.

'இசையால் வசமாகா இதயமெது?' மனத்தைக் கட்டுப்படுத்தும், பண்படுத்தும் வழிமுறைகளில் இசைக்கென தனித்துவ இடம் உண்டு. எல்லா மதங்களிலும் இசைக்கு தனியிடம் உண்டு. நல்ல இசை, அலைபாயும் மனத்தை அமைதிப்படுத்துகிறது. மன அழுத்தம், மன இறுக்கம், இரத்த அழுத்தம், சீரற்ற இதயத்துடிப்பு, தூக்கமின்மை போன்றவற்றுக்கு இசை சிறந்த நிவாரணி. சில சூழ்நிலைகளில் மனிதனுக்குப் புதிய



வேகம், ஊக்கம், கிளர்ச்சி தேவைப்படும். அதற்கு மத்தளம், ட்ரம்ஸ், தாரை, தப்பட்டை, கொட்டு வாத்தியங்கள் போன்ற தோல் கருவிகளில் இருந்து தெறிக்கும் இசை, நரம்புகளை முறுக்கேற்ற உதவும்.

மருத்துவத் துறையினர், இசையின் பக்கமும் கவனம் செலுத்தி வருகின்றனர். இத்தாலி நாட்டின் 'பாவியா' நகரில் உள்ள பல்கலைக் கழகத்தில், 'மருந்துகள் பிரிவு' பேராசிரியர் லூசியானோ பெர்னார்டி தலைமையில், 'இசை மருத்துவம்' (Music Therapy) குறித்து ஆய்வு நடைபெற்று வருகிறது. அமெரிக்காவில் ஒரு பல் மருத்துவ நிபுணர், மயக்க மருந்தோ அல்லது வலிக் குறைப்பு மருந்தோ இன்றி, நூற்றுக் கணக்கான நோயாளிகளுக்கு இசை மூலமாகவே சிகிச்சை அளித்திருக்கிறார். பொஸ்டனில் (Bostan), இசையைக் கொண்டு இருதய அறுவைச் சிகிச்சையும் சுகப் பிரசவ சிகிச்சையும் நடைபெற்றுள்ளது.

ராக ஆராய்ச்சியாளர்கள், எந்தெந்த ராகம் எந்தவிதமான உடல் நலப் பிரச்சினைக்கும், எந்தவிதமான மனநலப் பிரச்சினைக்கும் நிவாரணம் அளிக்கிறது என்பதை ஆய்வுப் பூர்வமாகச் சுட்டிக்காட்டும் போது, வியப்பு மேலிடுகிறது.

தோடி ராகம் உயர் இரத்த அழுத்தம், தலைவலி, பதற்ற உணர்வைத் தணிக்கிறது. ஹிந்தோள ராகம் தாழ்நிலை இரத்த அழுத்தம், வாதம் போன்றவற்றை சீர் செய்கிறது. பைரவி ராகம் ஆஸ்துமா, காச நோய் உள்ளிட்ட சுவாச நோய்களுக்கும் புற்றுநோய்க்கும் நல்ல நிவாரணம் அளிக்கிறது. சாரங்கா ராகம் பித்தத்தைத் தணிக்கிறது. ஆசிர்பைரவி ராகம் அஜீரணத்துக்கு நிவாரணம் தருகிறது. பிலஹரி, தர்பார் ராகங்கள் மன அழுத்தத்துக்கான மருந்துகளாகின்றன. சிந்துபைரவி கருணையையும் முகாரி மற்றும் சிவரஞ்சனி, சோக உணர்வையும் ஹம்சத்வனி வீரத்தையும் சஹானா மற்றும் மத்யமாவதி மன அமைதியையும் கானடா மற்றும் பாகேஸ்வி பக்தி உணர்வையும் நீலாம்பரி தாலாட்டு உணர்வுமிக்க தூக்கத்தையும் புன்னகவராளி அதீத கபத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றலையும் அளிக்கின்றன.

கர்ப்பிணிகள் இனிய இசையைத் தினமும் காலை, மாலை நேரங்களில் 30 நிமிட நேரமாவது கேட்டு வந்தால், பிரசவ காலச் சிக்கல்கள் குறையும் சுகப்பிரசவம் நிகழும்.

இரவு தூங்கும் முன், மனத்தை மென்மையாக வருடிக் கொடுக்கும் இசையுடன் கூடிய சில பாடல்களைக் கேட்பது உடலுக்கும் நல்லது, மனத்துக்கும் நல்லது. நல்ல தூக்கமும் அமையும்.

இசை சிகிச்சை எனும்போது, நோயாளியே இசைக் கருவியை வாசித்தல் அல்லது பாடுதல் ஆகும். இது முடியவில்லை என்றால், இசையைக் கேட்டு ரசித்து மூழ்கலாம். இதற்கு, ராக தாளங்கள் பற்றிய அறிவும் பயிற்சியும் அவசியம் இல்லை. இசையை உணரும் இரசனை இருந்தாலே போதும். இசையைக் கேட்கக் கேட்க, இருதய நோய்கூட படிப்படியாகக் குணமாகிறது. விரக்தியின் விளிம்பில் நிற்பவர்கள், சில ராகங்களைக் கேட்கும்போது, நாளடைவில் விரக்தியில் இருந்து விடுபட்டு மன அமைதி பெறுகின்றனர்.

கல் மனத்தையும் கரைய வைக்கும் சக்தி ஹரிகாம்போதி ராகத்துக்கு உண்டு. புதிய பறவை படத்தில் இடம்பெற்ற 'உன்னை ஒன்று கேட்பேன்' பாடல் ஹரிகாம்போதி ராகத்தில் அமைந்த பாடல். மனத் துன்பங்களில் இருந்தும், மனப் பிரச்னைகளில் இருந்தும் மீள, மன அமைதி பெற, ஆனந்தபைரவி, ஸ்ரீரஞ்சனி, சஹானா, நீலாம்பரி, ஹம்சத்வனி ராக இசைகள் பேருதவி புரியும்.

வேலை தேடியோ, வேலைப் பளுவாலோ மனத்தளர்ச்சி அடைந்த இளைஞர்கள், குடும்பச் சுமையும் பொருளாதார நெருக்கடிகளும் தாக்கிய நிலையில் நடுத்தர வர்க்கத்தினர், மனப்பாட முறைப் பாடத்திட்டங்களால் மனம் சோர்ந்த மாணவர்கள் அனைவரும், பிடித்தமான இசையைத் தழுவுங்கள். மனத்தில் இசையை நிரப்புங்கள். கேட்கும் இசையும் பாடலும், மென்மையாக அமையட்டும். இரைச்சல் மிகுந்த பாடல்களை, இசையை நிராகரியுங்கள். அது மூளைக்கும், இதயத்துக்கும் நன்மை செய்வதில்லை.

ஆனால் எல்லா இசையும் நோயைக் குறைப்பதில்லை. மனதுக்கு மகிழ்வான, மென்மையான இசைக்கு மட்டுமே நோய்களைக் குணப்படுத்தி மனதை அமைத்திப்படுத்தும் ஆற்றல் உள்ளது. ராக், மெட்டல் ராக் போன்ற துரித இசைகள் மனக்கிளர்ச்சியை உண்டு பண்ணுவதோடு, இரத்த அழுத்தத்தை அதிகப்படுத்துகின்றன. மன இறுக்கம், இரத்தக் கொதிப்பு, இருதய நோய்கள், தூக்கமின்மை போன்றவைகளால் பாதிக்கப்பட்டவர்கள் இத்தகைய இசையைக் கேட்பதை குறைப்பது உளத்திற்கு நல்லது.

**காலிங்கராசா ஹரிச்சந்திரா,**
**தொழில்நுட்ப அலுவலர்,**
**மீன்பிடியியல் விஞ்ஞானத் துறை,**
**விஞ்ஞான பீடம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழவு இயந்திரத்...

மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 36 வயது மதிக்கத்தக்க இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை குறித்த விபத்தினை ஏற்படுத்திவிட்டு உழவு இயந்திரத்துடன் சாரதி தப்பிச்சென்ற நிலையில் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,299)

## சதொசவில்...

ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்தின் விலை 10 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி அதன் புதிய விலை 220 ரூபாயாகும்.

ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 10 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 165 ரூபாயாகும்.

ஒரு கிலோகிராம் வெள்ளைச் சீனியின் விலை 5 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வெள்ளைச் சீனி கிலோவொன்றின் புதிய விலை 235 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோகிராம் சிவப்புப் பருப்பின் விலை 3 ரூபாயினால் விலை குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 285 ரூபாயாகும்.

ஒரு கிலோகிராம் வெள்ளைப் பச்சை அரிசியின் விலை ஒரு ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 209 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம-7)

## 200 மில்லியன்...

லேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் தேங்காய்ப் பால், தேங்காய் பால்மா மற்றும் உறைந்த தேங்காய் உள்ளிட்ட 3 பிரிவுகளின் கீழ் 200 மில்லியன் தேங்காய்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் எனவும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் இது தொடர்பான அமைச்சரவை அனுமதிப்பத்திரத்தை விரைவில் முன்வைப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதாகவும் குறித்த அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## இலங்கை - இந்...

யாழ்ப்பாணம் - சங்கானைப் பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடற்றொழிலாளர்களின் தலைவர்களை நாங்கள் விநயமாகக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், நாங்கள் உங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயார்.

உங்களுடைய பிள்ளைகள் எங்களுடைய தொப்புள்கொடி உறவுகள், எங்களுக்கு அண்மித்த நாடு அந்த வகையில் நாங்கள் நல்ல முறையில் எங்களுடைய உறவுகளைப் பேணிப் பாதுகாப்பதற்கே முயற்சிக்கின்றோம்.

அந்த முயற்சியை பாதிக்கும் வேலையாகவே இந்திய தமிழ்நாட்டு கடற்றொழிலாளர்களுடைய செயற்பாடுகள் காணப்படுகின்றது” எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

## அர்ச்சுனா...

பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ரம்பேவ பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து, பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததாகக் குற்றம் சுமத்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

தனது வாகனத்தில் அங்கீகரிக்கப்படாத விஜபி விளக்குகளைப் பயன்படுத்தியதற்காக தடுத்து நிறுத்தப்பட்ட பின்னர், பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா போக்குவரத்துப் பொலிஸ் அதிகாரிகளுடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டார்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து, அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அவர் கைது செய்யப்பட்டார். அநுராதபுரம் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட எம்.பி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ம-7)

## மறைந்த மாவை...

தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் முக்கிய உறுப்பினர்களால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கொடி போர்க்கப்பட்டு, மதிப்பளிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் பூதவுடலுக்கு யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத்தூதர் சாய் முரளி அஞ்சலி செலுத்தினார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாமல் எம்.பி, மனோ கணேசன், செந்தில் தொண்டமான், டக்ளஸ் தேவானந்தா, சித்தார்த்தன், கலாநிதி ஆறு. திருமுருகன் உட்பட பலர் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளனர்.

அத்தோடு அரசியல் பிரமுகர்கள், வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் தொடர்ந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

மாவைசேனாதிராஜாவின் இறுதிக்கிரியை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மாவிட்டபுரத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ஜனா...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

ஜனாதிபதி தனது விஜயத்தின்போது வலவெட்டித்துறை மற்றும் சாவகச்சேரி பிரதேசங்களில் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார்.

மேலும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளார்.

இதேவேளை, வடக்கு-கிழக்கு வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் வடமாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பாக சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளது.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதாக பல அரசியல் கட்சிகள் வாக்குறுதி அளித்த போதிலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சுமார் 21000 பட்டதாரிகள் வேலையின்றி இருப்பதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறுகின்றனர்.

மேலும் பட்டதாரிகளுக்கு போட்டிப் பரீட்சையின்றி வேலைவாய்ப்பை வழங்குமாறு அதிகாரிகளிடம்கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி தமது விஜயத்தின் போது பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் அதேவேளை, தமது பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில் இந்தப் பணிப்புறக்கணிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

இலங்கைத்தமிழரசுக்கட்சியின்மூத்த உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மறைந்த மாவை சேனாதிராஜாவுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேரில் சென்று அஞ்சலி செலுத்தவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. (ம-7)


Mahajana Sampatha — திகதி 2025.01.30 — சீட்டிழுப்பு இலக்கம் 5732 — C 4 4 2 9 5 9
Ada Sampatha — C 2 9 5 9 — சீட்டிழுப்பு இலக்கம் 307
National Lotteries Board

தன நிதானய — திகதி 2025.01.30 — சீட்டிழுப்பு இலக்கம் 1762
G 09 50 54 77 G
Double Chance 70540

மெகா பவர் — திகதி 30/01/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2080
M 06 02 18 32 76

லக்கி 7 VIP — திகதி 2025.01.30 — சீட்டிழுப்பு இலக்கம் 558
A 6 7 3 9 1 7 A

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3974 — சீட்டிழுப்பு திகதி 30.01.2025
N 01 67 69 79 N
தேசிய லொத்தர் சபை

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.01.30 — சீட்டிழுப்பு இலக்கம் 1041
கன்னி 15 20 41 56 கன்னி
79012 — 03

உத்தியோகபூர்வ முடிவுகள் — Supiri Dhana Sampatha — 30.01.2025 — வெற்றி வாரம் 440
E 6 5 3 3 2 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,153,595.60
52845
DLB — வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2706 — சீட்டிழுப்பு திகதி 2025.01.30 — தினம் வியாழக்கிழமை
28 54 56 59 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 83,130,629.60

சனிதா — திகதி 30.01.2025 — வெற்றி வாரம் 4867
04 08 12 17 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,660,434.40
ரூ. 100,000/- 89181

சசிரி — 611 — 30.01.2025 — வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 32 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

லக்ன — சீட்டிழுப்பு வாரம் 4418 — சீட்டிழுப்பு திகதி 30.01.2025 — தினம் வியாழக்கிழமை
05 08 22 37
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.8,137,467.20
160155

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 08 01 43 44 70
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.563,643,806.80
1882 — 30.01.2025

ADA KOTIPATHI — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 2532 — சீட்டிழுப்பு திகதி 2025.01.30
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,313,840.80
06 10 21 66 P
748696


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## A/L - வரலாறு

M.பத்மன் B.A(Hons) History, P.G.D.E, M.E.D, M.A(Hons) History

கற்பிக்கும் இடங்கள்

| D.M.I | BITSMANS | உயர்கலைக் கல்லூரி | Online |
|---|---|---|---|
| ஆரியகுளம், யாழ்ப்பாணம். | மானிப்பாய் | கொக்குவில், குளப்பிட்டி. | Zoom Class |

A/L - 2K25, 2K26 பிரிவுகளுக்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
A/L - 2K25 வகுப்பிற்கு நேரடியாக சமூகமளிக்க முடியாத வெளி மாவட்ட மாணவர்களுக்கு மட்டும் Zoom வகுப்பு நடைபெறும்.

தொடர்பு : 077 482 5587

(C-2167)

## BEACON STUDY CENTRE

வதிரி, கரவெட்டி.

A/L DAY CLASS

கணித உயிரியல் பிரிவு

ஆரம்பம் : 03.02.2025(திங்கள்)

காலை 8.00 மணி (CHEMISTRY)

(C-2168)

நிர்வாகி


## வடக்கின்...

வடக்கின் பல்வேறு தேவைப் பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு புலம் பெயர்வுக்கான சர்வதேச அமைப்பிடம்(ஐ.ஒ.எம்) உதவி எதிர்பார்ப்பதாக வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களுக்கும், புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் (ஐ.ஒ.எம்) இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பணிக் குழுத்தலைவர் கிறிஸ்டின் பார்ஸோவுக்கும் இடையிலான சிநேகபூர்வமான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று வியாழக் கிழமை இடம்பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டமைக்கு வாழ்த்துக் களைத் தெரிவித்த பணிக்குழுத் தலைவர் கிறிஸ்டின் பார்ஸோ, முதல் தடவையாக இங்கு வந்துள்ளதாகவும் குறிப்பிட்டார். வடக்கு மாகாணத்தின் நிலைமைகள் தொடர்பில் அறிவது தனது பயணத்தின் நோக்கம் எனவும் ஆளுநருக்குத் தெரியப்படுத்தினார்.

கடந்த காலங்களில் மாவட்டச் செயலராக இருந்தபோது ஐ.ஒ.எம் உடன் இணைந்து பணியாற்றியமையை ஆளுநர் நினைவுகூர்ந்தார். தற்போதும் யாழ். மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்த மக்களின் தேவைப்பாடுகள் அதிகளவில் இருக்கின்றன எனவும் அவர்களுக்கு உதவிகள் தேவைப்படுகின்றன என்பதையும் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க கூடுதலான உதவி தேவைப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இளையோருக்கான வேலைவாய்ப்பு பெரும் சவாலாக இருப்பதாகக் குறிப்பிட்ட ஆளுநர், கடந்த காலங்களில் இயங்கிய தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றமையும் இதற்குக் காரணம் எனச் சுட்டிக்காட்டினார். இதனால் இளையோர் உயிர்கொல்லி போதைப்பாவனைக்கு அடிமையாகும் நிலைமையும் அதிகரித்துச் செல்கின்றது என்பதைக் குறிப்பிட்டதுடன், முதலீடுகளை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இதன் ஊடாக வேலை வாய்ப்புக்களை அதிகரிக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

வடக்கின் பல்வேறு தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு ஐ.ஒ.எம்மிட மிருந்து உதவிகளை எதிர் பார்ப்பதாகவும் ஆளுநர் இதன்போது சுட்டிக்காட்டி னார்.

ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படும் தமிழ் இளைஞர்களை மீட்டுத்தருமாறு அவர்களது பெற்றோர்கள் முன்வைத்த கோரிக்கைகளையும் ஆளுநர் இதன்போது ஐ.ஒ.எம்மிடம் கையளித்தார். (ம-7)


## வேலையாட்கள் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனமொன்றிற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.

077 839 3974, 077 606 1333
076 889 1308

(798)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-2169)

## மொத்தக் கொள்வனவுகள்

மொத்தக் கொள்வனவு, டெலிவரிகள் வடமராட்சி சில்லறை கடைகளிற்கு பொருட்கள் கொள்வனவுகள், இலவச Home டெலிவரிகளினை Happy Supermarket உரும்பிராயினூடாகப் பெற்றுக் கொள்ளலாம்.

Happy Supermarket - உரும்பிராய்
076 800 6500/ 077 780 8030

(799)

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி

## ஸ்ரீமான் வேலுப்பிள்ளை பரராஜசிங்கம்

(பல்துறை வர்த்தகர், கமநிலக்கிழார்)



கடந்த வருடம் 11.02.2024 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவருக்கு எமது இதய அஞ்சலி

மண்டைதீவின் மைந்தனாய்!
ஊர் போற்ற வாழ்ந்து
அன்புக் கணவனாய்
அருமைத் தந்தையாய்
பேரன்புப் பேரனாய்
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உம் முகம்
எந் நாளும் உலா வரும்
ஆண்டொன்றும் ஆகிவிட
ஆறாது தவிக்கும் நாம்
உங்கள் ஞாபகத்துடன்....

இன்று 31.01.2025 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஓராண்டு நினைவு அஞ்சலியிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம்
02.03.1945

மறைவு
11.02.2024

" கலா கார்டின்"
335/7, மன்னார் வீதி,
வேப்பங்குளம், வவுனியா.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(C-2166)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.